




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 261 03.05.2026 ஞாயிற்றுக்கிழமை

Chennai Volume: 01 Issue: 261 Sunday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

ஞாயிற்றுக்கிழமை
(03–05–2026)
பராபவ ஆண்டு, சித்திரை–20
பிறை: தேய்பிறை
திதி
துவிதியை பின்னிரவு 2.39 வரை பிறகு திருதியை,
நட்சத்திரம்:
விசாகம் காலை 6.59 வரை பிறகு அனுஷம்
யோகம்
மரண யோகம்
ராகுகாலம்
மாலை 4.30–6.00 மணி.
எமகண்டம்
நண்பகல் 12.00–1.30 மணி
சூலம் – மேற்கு
நல்ல நேரம் :
காலை 7–8 மணி.
மாலை 3–4 மணி.

| | |
|---|---|
| மேஷம் | சாந்தம் |
| ரிஷபம் | சாதனை |
| மிதுனம் | நலம் |
| கடகம் | நன்மை |
| சிம்மம் | சிந்தனை |
| கன்னி | பக்தி |
| துலாம் | பணிவு |
| விருச்சிகம் | ஆதரவு |
| தனுசு | ஆக்கம் |
| மகரம் | ஆதரவு |
| கும்பம் | சுபம் |
| மீனம் | கடமை |

# தமிழகத்தில் நாளை முதல் கத்தரி வெயில்!

## கோடை மழைக்கு வாய்ப்பு? வானிலை ஆய்வாளர் தகவல்

**சென்னை, மே 3:**

தமிழ்நாட்டில் கோடை காலம் மார்ச் மாதம் தொடங்கி சுட்டெரித்து வருகிறது. நேற்று முன்தினம் வேலூரில் 108 டிகிரியை தாண்டி வெயில் பதிவாகியது. இதுபோல் தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களில் 105 டிகிரியை கடந்தும், சில இடங்களில் 100 டிகிரியை தாண்டியும் வெப்பம் கோர முகத்தை காட்டி வருவதை பார்க்க முடிகிறது.

இதன் தொடர்ச்சியாக கோடை காலத்தின் உச்சம் என்று கூறப்படக் கூடிய அக்னி நட்சத்திரம் என அழைக்கப்படும் கத்தரி வெயில் காலம் வருகிற 4-ந்தேதி முதல் 28-ந்தேதி வரை நீடிக்கும். இந்த காலகட்டத்தில் வெப்பம் கோரத்தாண்டவம் ஆடும். பகலில் கொளுத்தும் வெயிலால் இரவில் கடும் உஷ்ணத்தை உணர முடியும். பகலில் 110 டிகிரி வரை கூட வெப்பத்தின் தாக்கம் பதிவாகும்.



அந்த வகையில் நாளை (திங்கட்கிழமை) தொடங்க இருக்கும் கத்தரி வெயில் காலம் இந்த ஆண்டு எப்படி இருக்கும்? என்பது குறித்து தனியார் வானிலை ஆய்வாளர் டெல்டா வெதர்மேன் ஹேமச்சந்தர் விளக்கம் அளித்தார்.

முதல் 2 வாரங்கள் கடல் சார்ந்த அலைவுகள் இந்திய பெருங்கடல் பகுதிகளுக்கு வருகிறது. வெப்பமண்டல காற்று குவிதல் வடக்கு நோக்கி பயணிக்க இருக்கிறது. இதனால் இந்த ஆண்டு கத்தரி வெயில் காலம் வெப்பமும், கோடை மழையும் கலந்த கலவையாகவே இருக்கும். கோடை மழை இயல்பைவிட அதிகமாகவே பதிவாகும்.

இதுமட்டுமல்லாமல், தென்மேற்கு பருவமழை நடப்பாண்டில் முன்கூட்டியே வருகிற 23-ந்தேதி முதல் 25-ந்தேதிக்குள் கேரளம் மற்றும் அதனையொட்டிய கர்நாடகா, தெற்கு ஆந்திராவில் தொடங்கும் என கணிக்கப்பட்டிருக்கிறது. பருவமழைக்கு முந்தைய மழைப்பொழிவும் கோடை காலத்தில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது பருவக்காற்றை கொண்டு வரக்கூடிய காற்று சுழற்சி, காற்றழுத்த தாழ்வுப் பகுதி. புயல் போன்ற அமைப்புகள் உருவாகி மழையை கொடுக்கும்.

அதாவது, இம்மாதத்தின் முதல் வாரத்தில் மேற்கு, உள்மாவட்டங்களில் மழையும், 2 மற்றும் 3-வது வாரத்தில் தமிழ்நாட்டில் பரவலாக மழையும் பெய்ய வாய்ப்புள்ளது. அதுவும் இடி மின்னலுடன் கூடிய மழையாகவே இருக்கும். அதிலும் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 4-வது வாரத்தில் பருவமழை தொடங்கிய பிறகு தமிழ் நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலையையொட்டிய பகுதிகளில் மழை பெய்யக் கூடும்.

ஆக கத்தரி வெயில் காலத்தில் கோடை மழை என்ற சாதகமான சூழலே தற்போதுவரை இருக்கிறது. கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களுடன் மே மாத கணிப்பை ஒப்பிடுகையில் வெப்பம் காணப்பட்டாலும், கோடை மழை அதிகம் பதிவாகும் என்றே தெரிகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# கோவிலில் வழிபாட்டு உரிமை என்பது அனைவருக்கும் சமமானது: மதுரை ஐகோர்ட்டு நீதிபதி கருத்து

**மதுரை, மே 3:**

திருச்சி மாவட்டம் மணப்பாறை தாலுகா அயன்ரெட்டியபட்டியை சேர்ந்த கந்தசாமி, மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:

எங்கள் கிராமத்தில் உள்ள உலகநாயகியம்மன் மற்றும் முனியாண்டி சுவாமி கோவிலில் ஆண்டுதோறும் சித்திரை திருவிழா நடப்பது வழக்கம். இந்த ஆண்டு 10 நாட்கள் சித்திரை திருவிழா நடக்கிறது. இந்த விழாவுக்கு எங்களிடம் வரி வசூலிக்கக்கூடாது என கிராமத்தில் நிபந்தனை விதிக்கப்பட்டு இருக்கிறது. அந்த கோவிலில் தரிசனம் செய்யவும் அனுமதிப்பதில்லை.



கிராம பொது கோவிலில் எந்தவித வேறுபாடும் இன்றி அனைவரும் தரிசனம் செய்யலாம் என அரசியலமைப்புச்சட்டம் கூறுகிறது. அதன்படி எங்கள் குடும்பத்தினரிடம் சித்திரை திருவிழாவுக்கான வரியை வசூலிக்கவும், கோவிலில் தரிசனம் செய்யவும் நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு மதுரை ஐகோர்ட்டில் நீதிபதி விக்டோரியா கவுரி முன்பு விசாரணைக்கு வந்தது. விசாரணை முடிவில், கோவில் வழிபாட்டு உரிமை என்பது அனைவருக்கும் சமமானது. இதில் யாரையும் ஒதுக்குவதை அனுமதிக்க முடியாது.

எனவே மனுதாரர் குடும்பத்தினரிடம் வரிவசூலித்து, தரிசனத்துக்கு அனுமதிப்பது குறித்து சம்பந்தப்பட்ட போலீசார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தனர்.

# எரிபொருள் விலை கடுமையாக உயர்வு: ஏர் இந்தியா திடீர் முடிவு...



**புதுடெல்லி, மே 3:**

அமெரிக்கா - இஸ்ரேல் - ஈரான் இடையே நடைபெற்ற போர், தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. போரை நிரந்தரமாக முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகள் இழுபறியாகவே தொடர்ந்து வருகிறது.

உலகின் 20 சதவிகிதம் கச்சா எண்ணெய் வர்த்தகம் நடைபெறும் ஹார்முஸ் ஜலசந்தியில், அமெரிக்காவும் ஈரானும் தங்கள் கட்டுப்பாட்டை நிலைநாட்டும் போட்டியில் இருப்பதால் உலகளவில் எண்ணெய்வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால், விமான எரிபொருள் விலை அதிகமாகி இருப்பதால் விமான நிறுவனங்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளது. இதனிடையே சர்வதேச விமானங்களுக்கான எரிபொருள் விலையை 5 சதவீதம் உயர்த்தியது மத்திய அரசு.

இந்தநிலையில், சர்வதேச சந்தையில் விமான எரிபொருள் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், ஏர் இந்தியா நிறுவனம் தனது விமான சேவையில் சுமார் 10 சதவீதத்தை குறைக்க முடிவு செய்துள்ளது. இதனால் நாள் ஒன்றுக்கு சுமார் 100 விமானங்கள் ரத்து செய்யப்படலாம் என கூறப்படுகிறது.

ஐரோப்பா, வட அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் போன்ற சர்வதேச இடங்களுக்கான விமான சேவைகள் அதிக அளவில் குறைப்படும் என தகவல் வெளியாகி உள்ளது.

# தேர்தல் முடிவுகளை உடனுக்குடன் அறிய... புதிய இணையதள முகவரி!

**புதுடெல்லி, மே 3:**

ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளை உடனுக்குடன் அறிந்து கொள்வதற்காக தேர்தல் ஆணையம் பிரத்யேக இணையதள முகவரியை வெளியிட்டுள்ளது.

தமிழகம், புதுச்சேரி, கேரளம், மேற்குவங்கம் மற்றும் அசாம் ஆகிய ஐந்து மாநிலங்களில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களின் முடிவுகள் திங்கள்கிழமை (2026, மே 4) காலை 8 மணி முதல் அனைத்து வாக்கு எண்ணிக்கை மையங்களிலிருந்து கீழ்காணும் இணையதளங்களில் வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

தேர்தல் முடிவுகளை உடனுக்குடன் அறிந்துகொள்ள HTTPS://RESULTS.ECI.GOV.IN/ என்ற இந்திய தேர்தல் ஆணையத்தின் பிரத்யேகமான இணையதளத்தில் ஒவ்வொரு தொகுதியின் சுற்று வாரியான நிலவரங்களும், முடிவுகளும் நொடிக்கு நொடி புதுப்பிக்கப்பட்டு, வெளியிடப்படும். இது தவிர ECINET மற்றும் வாக்காளர் உதவி VOTER HELPLINE என்ற செயலியின் வாயிலாகவும் நிலவரங்களையும், முடிவுகளையும் பொது மக்கள் உடனுக்குடன் அறிந்துக் கொள்ளலாம்.

சம்பந்தப்பட்ட வாக்கு எண்ணிக்கை மையங்களில் உள்ள தேர்தல் பொறுப்பு அதிகாரி வழங்கும் தகவல்கள், இணையதளத்திலும், செல்பேசி செயலியிலும் வெளியிடப்படும்.

# ஜம்மு காஷ்மீரில் பழைய பாலம் இடிந்து விழுந்த விபத்தில் 3 பேர் உயிரிழப்பு

**ஜம்மு, மே 3:**

ஜம்மு காஷ்மீரின் ஜம்மு புறநகர் பகுதியில் பாலம் ஒன்று இடிந்து விழுந்ததில், மூன்று பேர் உயிரிழந்தனர், இருவர் காயமடைந்துள்ளனர்.

ஜம்மு புறநகர் பகுதியான 'தூதர்' (THUTHER) பகுதியில் இருந்த பழைய பாலம் ஒன்று கடந்த ஆண்டு ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் சேதமடைந்தது. சேதமடைந்த பாலத்தை சீர் செய்யும் நோக்கில் தடுப்புச் சுவர் மற்றும் அடித்தளம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது நேற்று மாலை பாலத்தின் ஒரு பகுதி திடீரென இடிந்து விழுந்தது. இதில், நான்கு தொழிலாளர்கள் இடிபாடுகளில் சிக்கிக்கொண்டனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த காவல்துறை, ராணுவம், தேசியப் பேரிடர் மீட்புப் படை, மாநிலப் பேரிடர் மீட்புப் படை மற்றும் தீயணைப்பு துறையினர், உடனடியாக மீட்புப் பணிகளைத் தொடங்கினர்.

இரவு முழுவதும் மின்விளக்குகளின் வெளிச்சத்தில் நடைபெற்ற 12 மணி நேரத்




தேடுதல் பணி காரணமாக, முதலில் தர்செம் லால் என்ற தொழிலாளி காயத்துடன் மீட்கப்பட்டார். பின்னர், மூன்று தொழிலாளர்களின் உடல்கள் மீட்கப்பட்டன. மீட்புப் பணியின்போது பாறை விழுந்ததால் தீயணைப்புத் துறை அதிகாரி முகமது ஜாபர் காயமடைந்தார். காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவ இடத்துக்கு நள்ளிரவு வந்த துணை முதல்வர் சுரேந்தர் குமார் சௌத்ரி, மீட்புப் பணிகளை பார்வையிட்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "இந்த விபத்து தொடர்பாக உதவிச் செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோரை பணியிடை நீக்கம் செய்ய நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், செயற்பொறியாளரை நிர்வாக ரீதியாக வேறு பணிக்கு மாற்றவும் தலைமைப் பொறியாளருக்கு நான் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளேன். சம்பவம் குறித்து விசாரணை நடத்த அரசு சார்பில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு ஐந்து நாட்களுக்குள் விசாரணையை நிறைவு செய்ய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன்" என தெரிவித்தார்.

துணை முதல்வரின் உத்தரவை அடுத்து, உதவிச் செயற்பொறியாளர் சஹில் வர்மா, இளநிலைப் பொறியாளர் சஜாத் மிர் ஆகியோர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். பொதுப்பணித் துறையின் தொழில்நுட்பச் செயலாளரும் தலைமைப் பொறியாளருமான புருஷோத்தம் குமார் தலைமையில், மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஒரு விசாரணைக்குழு விசாரணையை தொடங்கியுள்ளதாகவும் அதிகாரிகள் கூறினர்.




## குறிச்சி வழிவிடு பெரியநாச்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழா ஏராளமான பக்தர்கள் அக்கினி சட்டி பால்குடம் எடுத்து வழிபாடு







**மானாமதுரை மே 03:**
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பரமக்குடி சாலையில் உள்ளது பிரசித்தி பெற்ற ஸ்ரீ வழிவிடு பெரியநாச்சி அம்மன் கோவில் இங்கு ஆண்டுதோறும் சித்திரை பௌர்ணமி பெருவிழா பத்து நாட்கள் நடைபெறும்.

இந்த ஆண்டு கடந்த ஏப்ரல் 26ந்தேதி பெரிய நாச்சி அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் செய்து திருவிழா தொடக்க நிகழ்ச்சியாக மஞ்சள் காப்பு கட்டுதல் நடைபெற்றது

இதில் ஏராளமான பக்தர்கள் அக்கினி சட்டி, பால்குடம், அங்கபிரதட்சணம் மற்றும் காவடி எடுக்கபக்தர்கள் காப்பு கட்டி விரதம் தொடங்கினார்கள்.

கோவில் வளாகத்தில் உள்ள காசிவிஸ் வநாதர்க்குசிறப்பு அபிஷேகம் காசி ஹனுமான் சன்னதியில் வடைமாலை சாற்றி சிறப்பு வழிபாடு அதை தொடர்ந்து திருவிளக்கு பூஜை நடைபெற்றது. விழாவில் முக்கிய விழாவான பொங்கல் பூஜை நடைபெற்றது.

இதில் அக்கினி சட்டி பால்குடம் காவடி எடுத்து ஊர்வலமாக வந்து வழிபாடு செய்தனர். அதை தொடர்ந்து அம்மனுக்கு பாலாபிஷேகம் செய்து சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

விழாவில் கலந்து கொண்ட பக்த்தர்களுக்கு சிறப்பு அன்ன தானமும் இரவு வான வேடிக்கை வெடி வழிபாடுடன் திருவிழா நிறைவு பெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## செட்டிநாட்டு குமாரராணி முனைவர் மீனா முத்தையா மறைவு

### முதல்வர் ஸ்டாலின் இரங்கல்



சென்னை: செட்டிநாட்டு அரசர் குடும்பத்தைச் சேர்ந்த குமாரராணி முனைவர் மீனா முத்தையா மறைவுக்கு முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட இரங்கல் குறிப்பில், "செட்டிநாட்டு அரசர் குடும்பத்தைச் சேர்ந்த குமாரராணி முனைவர் மீனா முத்தையா மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். கலைச் சேவை, கல்விச் சேவை இரண்டையும் தமது வாழ்வின் இருபெரும் லட்சியங்களாகக் கொண்டு வாழ்ந்த பெருமைக்குரியவர் மீனா முத்தையா.

தஞ்சாவூர்க் கலைக்குப் புத்துயிர் கொடுத்து, அதற்காகவே குமார ராஜா முத்தையா கலை மற்றும் கைவினைக் கலைப் பள்ளியின் மூலம் பயிற்சியும் அளித்து வந்த அவரது பணிகள் என்றென்றும் நினைவுகூரப்படும். தனிப்பட்ட முறையிலும் எங்களது குடும்பத்துடன் இனிய நட்புறவைப் பேணி வந்த அவர், எனது துணைவியாரின் நூல் வெளியீட்டு விழாவிலும் 2018-ஆம் கலந்துகொண்டு உரையாற்றியதைஇவ்வேளையில் நினைவுகூர்கிறேன்.

மீனா முத்தையா மறைவால் வாடும் அவரது குடும்பத்தினர்கள், உறவினர்கள், நண்பர்கள், நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## திருச்செந்தூரில் திடீரென 70 அடி தூரத்திற்கு உள்வாங்கிய கடல்!



**திருச்செந்தூர், மே 03:**
அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் கடற்பகுதியில் இன்று காலை திடீரென கடல் நீர் உள்வாங்கியதால் பரபரப்பு ஏற்பட்டது. இந்த கோவிலுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து, கடலில் புனித நீராடிவிட்டு சுவாமி தரிசனம் செய்வது வழக்கம். பொதுவாக அமாவாசை மற்றும் பௌர்ணமி தினங்களை முன்னிட்டு காலையில் கடல் உள்வாங்கி, மாலையில் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்புவது இயற்கையான நிகழ்வாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், நேற்று காலை சுமார் 70 அடி தூரம் வரை கடல் நீர் உள்வாங்கியது. இதனால் வழக்கமாக கடலுக்குள் மூழ்கியிருக்கும் பாசி படர்ந்த பாறைகள் மற்றும் மணல் திட்டுகள் வெளிப்பட்டன.

இந்த நிகழ்வை பார்த்த பக்தர்கள் அச்சமடைய வேண்டாம் என கோவில் நிர்வாகமும் காவல்துறையும் அறிவுறுத்தியுள்ளன. கடற்கரை பகுதிகளில் காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு நிலைமையை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

## இடைக்காட்டூர் திரு இருதய ஆண்டவர் திருத்தலத்தில் சிறப்பு கூட்டு பிரார்த்தனை





**மானாமதுரை, மே 3:**
சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருகே உள்ள இடைக்காட்டூர் இங்கு 140 ஆண்டுகள் புகழ்பெற்ற திரு இருதய ஆண்டவர் திருத்தலத்தில் ஆங் கில மாதத்தின் முதல் வெள்ளி வழிபாடு நடைபெற்றது.

சிவகங்கை மறைமாவட்ட ஆயர் ஆனந்தம் தலைமையில் நடைபெற்ற இந்த வழிபாட்டில் பல்வேறு ஊர்களில் இருந்து வந்த குருமார்கள் பங்கேற்று மாதத்தின் முதல் வெள்ளி வழி பாட்டை நடத்திவைத்து திருப் பலி நிறைவேற்றினர்.

சிறப்பு கூட்டு பிரார்த்தனை திருப்பலி நடைபெற்றது. காலை 11 மணிமுதல் 2 மணிவரையும், மாலை 6 மணிமுதல் 8 மணிவரை பிராத்தனை திருப்பலி நடைபெற்றது.

முன்னதாக, ஆயர் ஆனந்தம் திருத்தலத்தில் புதிதாக அமைக் கப்பட்டுள்ள பீடத்துக்கு அபி ஷேகம் செய்துவைத்தார். இதில் தமிழகத்தின் பல்வேறு பகுதியி லிருந்து வந்திருந்த கிறிஸ்தவ மக் கள் பங்கேற்றனர்.

ஏற்பாடுகளை திருத்தல அருட் பணியாளர் ஜான் வசந்தகு மார் செய்து இருந்தார்.

## மானாமதுரை ஆற்றில் இறங்கும் வீர அழகரை காண வந்த பக்தர்களுக்கு சுந்தர விநாயகர் கோவிலில் அன்ன பிரசாதம் வழங்கப்பட்டது



**மானாமதுரை, மே 03:**
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வைகை ஆற்று கரையில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ ஆனந்த வல்லி சோமநாதர் கோவில் மற்றும் வீர அழகர் கோவில் உள்ளது.

ஆண்டு தோறும் பத்து நாட்கள் நடைபெறும் நிகழ்ச்சியில் சிகர நிகழ்ச்சியாக வீர அழகர் ஆற்றில் இறங்கும் வைபவம் நடைபெறும். இதை காண வைகை ஆற்றில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருவார்கள். ஆற்றில் இறங்கும் வீர அழகரை காண வருகை தரும் பக்தர்களுக்காக சுந்தர புரம் தெருவில் உள்ள புகழ்பெற்ற ஸ்ரீசுந்தர விநாயகர் கோவிலில் சிறப்பு அன்னபிரசாதம் வழங்கப்பட்டது.

கோவில் நிர்வாகடிரஸ்டி முன்னாள் ராணுவ வீரர் ராஜேந்திர பிரசாத் தமிழரசி முன்னிலையில் ப்ரத்யங்கிரா தேவி கோவில் ஸ்தபதி சண்முகம் அன்ன பிரசாதம் மற்றும் நீர் மோர் பக்தர்கள் அனைவருக்கும் வழங்கினார். விழாவில் ஆன்மிக மலர் டிரஸ்ட் வெளியிட்ட மானாமதுரை சித்திரை திருவிழா சிறப்பிதழ்கள் ஏராளமான பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. இதற்க்கான ஏற்பாட்டை சென்னை ஆன்மிக மலர் டிரஸ்ட் நிர்வாகம் சார்பில் செய்யப்பட்டது.





### மாதவரத்தில் பரிதாபம்

## பைக் மீது கன்டெய்னர் லாரி மோதி கணவன், மனைவி, மகன் பரிதாப பலி



**மாதவரம், மே 03:**
மாதவரம் ரவுண்டானா ஆந்திரா பஸ் நிலையம் அருகே பைக் மீது கன்டெய்னர் லாரி மோதியதில் கணவன், மனைவி, மகன் ஆகிய 3 பேரும் உடல்நசுங்கி சம்பவ இடத்தில் பலியானார்கள். இந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அம்பத்தூர் பகுதியை சேர்ந்தவர் கார்த்திகேயன் (40). டிரைவராக வேலை செய்து வந்தார். இவரது மனைவி பிரேமலதா (36). இவர்களுக்கு இன்பசெல்வன் (8) என்ற ஒரு மகன் உள்ளார். அதே பகுதியில் உள்ள பள்ளியில் 3ம் வகுப்பு படித்து வந்தான்.

இந்த நிலையில், மணலியில் உள்ள பிரேமலதாவின் உறவினர் வீட்டில் நேற்று சுபநிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கார்த்தி கேயன், பிரேமலதா, இன்பச்செல்வன் ஆகியோர் பங்கேற்றுவிட்டு நிகழ்ச்சி முடிந்ததும் நேற்று இரவு வீட்டிற்கு பைக்கில் புறப்பட்டனர். மாதவரம் ரவுண்டானா ஆந்திரா பேருந்து நிலையம் அருகில் வந்து கொண்டிருந்தனர். ரவுண்டானா மாடி பேருந்து நிலைய 2வது கேட் வழியாக பேருந்து ஒன்று வந்து 200 அடி சாலை வளைவில் திரும்பியபோது, பைக்கில் வந்த கார்த்திகேயன் பேருந்தின் மீது மோதாமல் இருக்க வலது புறம் திருப்பி சாலையின் ஓரமாக செல்ல முயற்சித்துள்ளார்.

அப்போது, இவர்களுக்கு பின்னால் வேகமாக வந்த கர்நாடகா மாநில கன்டெய்னர் லாரி எதிர்பாராதவிதமாக பைக் மீது மோதியதில் நிலைதடுமாறி கார்த்திகேயன், அவரது மனைவி, மகன் ஆகியோர் சாலையில் விழுந்தனர். சுதாரித்து எழுவதற்குள் அதே லாரியின் சக்கரங்கள் அடுத்தடுத்து 3 பேர் மீதும் ஏறி இறங்கியது. இதில், தலை, முகம், உடல் முழுவதும் நசுங்கி ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே குடிதுடித்து பரிதாபமாக உயிரிழந்தனர். அவ்வழியாக வந்த வாகன ஓட்டிகள் இந்த காட்சியை பார்த்து கண்கலங்கினர். பின்னால் வந்த வாகனங்களை நிறுத்திவிட்டு போலீசுக்கு தகவல் கொடுத்தனர். அந்த பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து, போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசாருக்குதெரிவித்ததின்பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து இறந்தவர்களின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

விபத்து குறித்து மாதவரம் போக்குவரத்து புலனாய்வு பிரிவு இன்ஸ்பெக்டர் சுகிலா வழக்குப்பதிவு செய்து விபத்து ஏற்படுத்திய காஞ்சிபுரத்தை சேர்ந்த கன்டெய்னர் லாரி டிரைவர் அன்பரசு (44) என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் விபத்தில் பலியான சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாதவரம் பகுதியில் மெட்ரோ ரயில் திட்ட பணி நடைபெற்று வருவதால் கடந்த சில மாதங்களாக இந்த பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. மேலும் ஆந்திரா பேருந்து நிலையத்திலிருந்து வரக்கூடிய பேருந்துகள், மாதவரம் சிஎம்டிஏவில் இருந்து வரக்கூடிய லாரிகள் என கனரக வாகனங்கள் அதிகளவில் இந்த சாலையில் சென்று வருவதால் போக்குவரத்து போலீசார் தொடர்ந்து பணியில் ஈடுபட்டு போக்குவரத்தை பராமரித்தாலும் இருசக்கர வாகன விபத்து அடிக்கடி ஏற்படுகிறது. எனவே, மாதவரம் ரவுண்டானா பகுதியில் போக்குவரத்து நெரிசலை தடுக்கவும், விபத்துகளை தவிர்க்கவும் போக்குவரத்து சிக்னல்கள் அமைக்கவேண்டும் என வாகன ஓட்டிகள் காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சிஎஸ்ஐ ஆலயத்தில் விடுமுறை வேதாகம பள்ளி தொடக்கம்



ஸ்ரீவில்லிபுத்தூர் சிஎஸ்ஐ தூய தோமா ஆலயத்தில் விடுமுறை வேதாகம பள்ளியை தொடங்கி வைத்த சபை குருவானவரும், குருசேகர தலைவருமான பால் தினகரன்.

## நாடாளுமன்றத்தின் பொதுக்கணக்கு குழு தலைவராக கே.சி.வேணுகோபால் மீண்டும் நியமனம்



அரசாங்கத்தின் செலவினங் களை ஆய்வு செய்வதும், நிதி பொறுப்புடைமையை உறுதி செய்வதும் பொதுக் கணக்குக் குழுவின் முக்கியப் பொறுப்பாகும். மேலும், இந்தியத் தலைமை கணக்குத் தணிக்கையாளர் சமர்ப்பிக்கும் அறிக்கைகளையும் இந்தக் குழு பரிசீலனை செய்கிறது. பொதுப் பணம் திறமையாகவும், ஒப்புதல் அளிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டங்களுக்கு ஏற்பவும் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை இது கண்காணிக்கிறது.

இந்தக் குழுவில் மக்களவையைச் சேர்ந்த 15 உறுப்பினர்களும், மாநிலங்களவையைச் சேர்ந்த 7 உறுப்பினர்களும் இணைந்து மொத்தம் 22 பேர் இடம்பெற்றுள்ளனர்.

2026-2027 ஆண்டுக்கான குழுத் தலைவராக, அரசின் வருவாய் மற்றும் செலவினங்கள் தொடர்பான தணிக்கை அறிக்கைகள் மீது நடைபெறும் ஆய்வுகளை கேசி வேணுகோபால் வழிநடத்துவார்.

பல்வேறு அமைச்சகங்களில் ஏற்படும் தேவையற்ற செலவுகள், நிர்வாக குறைபாடுகள், நிதி முறைகேடுகள் ஆகிய வற்றை ஆய்வு செய்யும் விவாதங்கள், விசாரணைகள் மற்றும் கண்டறிதல் நடவடிக்கைகளையும் அவர் மேற்பார்வை செய்வார்.

## வழக்கறிஞர் சங்கத் தலைவராக ஆர்.சி.பால் கனகராஜ் பொறுப்பேற்பு நயினார் நாகேந்திரன் வாழ்த்து



**சென்னை, மே 03:**
தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;-

சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சங்கத் (MHAA) தலைவராக தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்றுள்ள, தமிழக பாரதிய ஜனதா கட்சியின் மாநில துணைத்தலைவர் ஆர். சி.பால் கனகராஜுக்கு எனது இதயம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது சிறந்த தலைமையும் வழிகாட்டுதலும் கொண்டு, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சங்கம் மேலும் பல சாதனைகளைப் படைத்து, புதிய உயரங்களை எட்டும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது.

அவரது பதவிக்காலம் சிறப்பாக அமைய என் மனமார்ந்த நல்வாழ்த்துகள்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசு பஸ் பின்சக்கரத்தில் சிக்கி 2 வயது குழந்தை பலி: தர்மபுரியில் சோகம்

**தர்மபுரி, மே 03:**
தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு அருகே அரசுப் பேருந்தின் பின்சக்கரத்தில் சிக்கி 2 வயது குழந்தை சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தது.

பாலக்கோடு அடுத்த சாமியார் நகர் பகுதியைச் சேர்ந்த கூலி தொழிலாளி குமார்காவ்யா தம்பதியரின் 2 வயது மகள் வினோதினி, வீட்டின் முன்பு விளையாடிக் கொண்டிருந்தார்.

இந்நிலையில், பாலக்கோடு பேருந்து நிலையத்தில் இருந்து பெல்ரம்பட்டி செல்ல வேண்டிய 19-ஆம் எண் டவுன் பேருந்து பழுதானதால், அதற்கு மாற்றாக 4-ஆம் எண் பேருந்து இயக்கப்பட்டது. அந்த பேருந்து சாமியார் நகர் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது, வீட்டு முன்பு விளையாடிக் கொண்டிருந்த குழந்தை மீது பின்சக்கரம் ஏறியதாக கூறப்படுகிறது.

இந்த விபத்தில் குழந்தை உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது. தகவல் அறிந்த மாரண்டஅள்ளி போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து, குழந்தையின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தர்மபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்து தொடர்பாக போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## செல்போன் பயன்படுத்தியதை பெற்றோர் கண்டித்ததால் கல்லூரி மாணவர் தற்கொலை

**திருச்சி, மே 03:**
திருச்சி பாலக்கரை சங்கிலியாண்டபுரம் சபாபதி தெருவை சேர்ந்தவர் ரமேஷ். இவரது மகன் ஹரிதாஸ் (18 வயது). இவர் திருச்சியில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் ஓட்டல் மேலாண்மை முதலாமாண்டு படித்து வந்தார். இவர் அடிக்கடி செல்போன் பயன்படுத்தி வந்துள்ளார். இதனை அவரது பெற்றோர் கண்டித்தனர்.

இதனால் மனமுடைந்த ஹரிதாஸ் நேற்று முன்தினம் வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதையடுத்து பாலக்கரை போலீசார் அங்கு சென்று ஹரிதாஸ் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு

PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site

VGP THIRU NAGAR, PHASE-1
- Location: (Nr Mylapore Jn)
- Direction: N/ Face
- Total Area: 2400 sft
- Price: RS.650/sft

LIMITED PLOTS AVAILABLE!

Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner

## டீலர்கள் தேவை
மைலேஜ் பூஸ்டர்
20% ~ 30%

மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு
நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்
Manufactured By: Dlag Technologies, Chennai 33
போன் 63746 73041

## நிலம் தேவை
தெற்கு சென்னை
திருப்போரூர் to செங்கல்பட்டு ரோடு
1 to 2 ஏக்கர்
தொடர்புக்கு: Ph. 6384617773

## SUN SHINE PROPERTY
(Property & Developers)
லேயவுட், நிலம் & ஷேரிங் டாக்குமெண்ட்ஸ் தேவை
மனை விற்பனை
• பொன்மார் • சித்தாலப்பாக்கம்
600, 850, 900 sqft
முகவரி: K.K. நகர் சென்னை - 78 | தொடர்புக்கு: PH.9840804617

## Annai Violet Arts & Science College
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
UG & PG COURSES
ADMISSIONS OPEN
Ph: 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388

## WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
- HOUSEKEEPING STAFF (Male & Female)
- MARKETING EXECUTIVE - ELECTRICAL FIELD (Male & Female)
- ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
- ELECTRICAL SUB-CONTRACTOR
- DRIVER

GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!

## சிங்கபெருமாள்கோயில்
S.P கோயில். On. GST Road
2 ஏக்கர் விற்பனை
1 ஏக்கர் 25cr
வண்டலூர் கேளம்பாக்கம் ரோடு
17 ஏக்கர் விற்பனை
1 acre 16 cr
Ph. 9566055082

## EMI 50%
50% OFFER
PLOT FOR SALE
SITE NO: 2
SITE NAME: ஸ்ரீ நகர்
LOCATION: கருங்குழி, மேலாவளம்பேட்டை

SRI DEVELOPERS
LOCATION: ADAMBAKKAM, GUINDY.
OUR PROJECTS
SITE NAME: BHARATHI NAGAR
LOCATION: MULLI, MADHURANTHAGAM.

CONTACT US NOW FOR BOOKING!
PH. NO: 8220711499, 8870158259

## முருகன் துணை
A.S.R ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள் வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல் பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள் மற்றும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும்
அணுகவும்
7305025591, 9578622711

## GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும் சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE ரூபாய் ₹1.80 லட்சம்
800 SQFT
FREE FREE!!! 10 கிராம் GOLD COIN சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118

## PLOTS FOR SALE
SRI DEVELOPERS
மனைகள் விற்பனைக்கு
கிண்டி
மதுராந்தகம், கருங்குழி, ஒரகடம், படப்பை
EMI Available
BANK LOAN Available
CONTACT: 8220711499, 8870158259

## ePAPER PUBLISHING
WEBSITE / SOFTWARE
Publish | Manage | Deliver
Complete Solution for ePaper Publishing
COMPLETE ePAPER WEBSITE / SOFTWARE FOR JUST ₹2999/- PER YEAR
HOSTING Included | ADMIN PANEL Included | MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
CALL / WHATSAPP: 9040463899

## ADVERTISE WITH US
7789941009

## JUST Xth PASS
JOB OPPORTUNITY
₹25,000/- PER MONTH *
All Taluks & Districts in ALL STATES in INDIA
- FRESHERS CAN APPLY
- ATTRACTIVE SALARY
- GROWTH OPPORTUNITIES
- SECURE YOUR FUTURE

APPLY NOW!
Call / WhatsApp: 8122664699
*Terms & Conditions Apply

## ₹ 15000 - 21000 | Monthly
Full Time Job Apply, Fresh or Experienced,
100% Job Available Here. No registration fee, Direct Job,
Chennai, Tamilnadu,
- 12th to Graduate and Diploma/ITI Qualified and Other Degree Holders.
- Back Office,
- Data Entry,
- Tele Caller's,
- Field officer,
- Team management, Male/Female Both Can Apply,

Share Your Resume with Photo to
77899 41009

## WANTED
READYMADE SHOWROOM:
- Sales Man / Sales Girl

RESTAURANT:
- Briyani Master
- Chinese Master
- Atho Master
- Chef
- Helper

OTHER POSITIONS:
- Accounts
- Billing
- Internet Engineer

PLACE: T NAGAR, NAVALUR
CALL / WHAT'SAPP: 7550123560, 6369528629

## நிலம் தேவை
தெற்கு சென்னை
சென்னை
திருப்போரூர்
1 - 2 ஏக்கர்
செங்கல்பட்டு
திருப்போரூர்-செங்கல்பட்டு ரோடு உடனடி தேவை!
தொடர்புக்கு
Ph: 6384617773

## WANTED
Work From Home Opportunity
Telecallers Required
Also Hiring for IT Jobs
- Salary: ₹10,000 - ₹15,000
- Attractive Incentives
- Flexible Work From Home Option

Freshers & Experienced Both Can Apply
Contact Now: 9566072935

## D.சக்திவேல்
உங்கள் ஜோதிடர்: 9940374962

## PLOT FOR SALE
பொன்னேரி, திருவள்ளூர், கடம்பத்தூர் அருகில்
வீட்டு மனைகள் விற்பனைக்கு
BANK LOAN AVAILABLE
Contact: 9841495210

## WANTED
- LAB HELPER
- OFFICE BOY
- GARDENER

CHEMBARAMBAKKAM
CALL US 7550093245 / 7358696451

## திருமுடிவாக்கம்
அருகாமையில் அமைந்துள்ள சாரதா கம்பெனிக்கு
ஆட்கள் தேவை
ஆண்கள் மட்டும்
வயது: 18 முதல் 35 வரை
கல்வி தகுதி 10 முதல் any Degree
தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI, PF, Attendance Allowance போன்ற அனைத்து வசதிகளும் உண்டு
சம்பளம்: 18,000 முதல் 22,000 /-
தொடர்புக்கு: 9962400330, 9962400319, 9962400336
மெயில்: hrsarathagroup@gmail.com

## WANTED
ELECTRICIAN SUPERVISOR / ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US 7550093245 / 7358696451

## MATRIMONY WEBSITE/SOFTWARE
VIVAH | SHAADI | PELLI | KALYANAM
Find Your Perfect Life Partner
COMPLETE MATRIMONY WEBSITE FOR JUST ₹2999/- PER YEAR
HOSTING Included | ADMIN PANEL Included | MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
GET YOUR PROFESSIONAL MATRIMONY WEBSITE TODAY!
BEST PRICE BEST SOLUTION
CALL US 9040463899
WEBSITE www.matrimonyweb.in

## WANTED
OFFICE BOY
GUINDY
CALL US 7550093245 / 7358696451

## WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872

## கவிதை அரங்கம்!





உன்னைப் பார்த்த அந்த முதல் நொடி, இன்னும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது.


என் மௌனத்தைக் கலைக்கும் ஒரே இசை உன் கொலுசுச் சத்தம்.

உனக்காக நான் காத்திருப்பது, எனக்கே நான் செய்து கொள்ளும் தவம்.

காதலின் எல்லை எதுவென்று எனக்குத் தெரியாது, உன்னோடு வாழும் வரை அது நீளும்.

நீ என் பாதி அல்ல, நீதான் என் முழுமை!

## வாழ்க்கை தத்துவம்...



தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்த்தால் நிம்மதி பெருகும்.

நன்றியுள்ள இதயம் கடவுளின் இருப்பிடம்.

மாற்றங்களை ஏற்றுக்கொள்வதுதான் புத்திசாலித்தனம்.

பிறக்கும்போது எதையும் கொண்டு வரவில்லை; போகும்போதும் எதையும் கொண்டு செல்லப்போவதில்லை.

புகழைத் தேடாதே; புண்ணியத்தைத் தேடு.

நம்பிக்கை இருந்தால் இருளும் வெளிச்சமாகும்.

பொறுமை என்பது கசப்பானது, அதன் கனி இனிப்பானது.

## ஆட்டோமேட்டிக் சிக்கல்!

"டேய் கார்த்தி... சீக்கிரம் இங்கே வாடா!" என்று ஹாலில் இருந்து சத்தம் போட்டார் தந்தை மாணிக்கம்.

சமையலறையில் ரகசியமாகத் தோசை சுட்டுக் கொண்டிருந்த கார்த்தி, கையில் கரண்டியுடன் ஓடி வந்தான். அங்கே மாணிக்கம் தன் புது ஆண்ட்ராய்டு போனை கையில் பிடித்துக்கொண்டு, ஏதோ மந்திரவாதியைப் பார்ப்பது போலப் பார்த்துக்கொண்டிருந்தார்.

"என்னப்பா... எதுக்கு இப்படி கத்துறீங்க?" "டேய், இந்தப் போன்ல நான் என்ன பேசினாலும் அதுவாவே டைப் பண்ணுதுடா. 'வாய்ஸ் டைப்பிங்'னு சொன்னியே, அதை ஆன் பண்ணி வச்சேன். ஆனா இது நான் சொல்றதை விட, நான் நினைக்கிறதை எல்லாம் டைப் பண்ணி உன் அத்தைக்கு அனுப்பிடுமோன்னு பயமா இருக்கு!" என்றார் மாணிக்கம் அப்பாவித்தனமாக.

கார்த்தி சிரித்துக்கொண்டே, "அப்படியெல்லாம் ஆகாதுப்பா. நீங்க மைக் பட்டனை அமுக்கிட்டுப் பேசினா மட்டும்தான் அது டைப் பண்ணும். மத்தபடி பயப்படாதீங்க" என்று சொல்லிவிட்டு மீண்டும் சமையலறைக்குத் திரும்பினான்.

அடுத்த ஐந்தாவது நிமிடம்... கார்த்தியின் போனுக்கு வாட்ஸ்அப்பில் ஒரு மெசேஜ் வந்தது. அனுப்பியது அவன் அப்பா.

மெசேஜ் இப்படி இருந்தது: "டேய் கார்த்தி... அந்த கரண்டியைக் கீழ வைடா. உங்க அம்மா ஊர்ல இல்லாத தைரியத்துல தோசை சுடுறது சரி... ஆனா அந்த மாவுல உப்பு போட மறந்துட்டேன்னு நினைக்கிறேன்.

அப்புறம், அந்தத் தோசை மேல ரொம்ப நெய் ஊத்தாத, அப்புறம் கொலஸ்ட்ரால் ஏறிடும்னு உங்க அம்மா வந்து என்னைத்தான் திட்டும்!"

கார்த்தி அதிர்ந்து போய் ஹாலுக்கு ஓடி வந்தான். "அப்பா! இதை எப்படி போன்ல டைப் பண்ணீங்க? நான் சமையலறையில பண்றது உங்களுக்குத் தெரியாதுல்ல?" மாணிக்கம் மெல்லச் சிரித்தார். "அதெல்லாம் இருக்கட்டும்... அதுக்கு அடுத்து ஒரு மெசேஜ் அனுப்பி இருக்கேன் பாரு!"

அடுத்த மெசேஜ்: "கார்த்தி, நீ இன்னைக்கு நைட்டு உன் பிரண்ட்ஸ் கூடப் படம் பார்க்கப் போறேன்னு சொன்னியே... அதுக்கு உங்க அம்மா சம்மதிக்க மாட்டா. ஆனா, நான் இப்ப சுடுற தோசையில எனக்கு ரெண்டு கொடுத்துட்டு, மொபைல் போனை எப்படி கரெக்டா யூஸ் பண்றதுன்னு சொல்லிக்கொடுத்தா... நான் உன்னை அனுப்பி வைக்கிறேன்!"

கார்த்தி வியப்புடன், "அப்பா... இதெல்லாம் நீங்க பேசாமலேயே மெசேஜ் வருது... எப்படி?" என்று கேட்டான்.

மாணிக்கம் மெல்ல எழுந்து அவன் அருகே வந்து ரகசியமாகச் சொன்னார், "டேய், 'வாய்ஸ் டைப்பிங்' எல்லாம் அப்புறம் கத்துக்கலாம். முதல்ல உன் போன்ல இருந்து நீ எனக்கு 'ஸ்கிரீன் மிரரிங்' (SCREEN MIRRORING) ஆன் பண்ணி வச்சிருக்க... அதனால நீ உன் போன்ல யாருக்கு என்ன மெசேஜ் அனுப்புறன்னு இந்த டிவியில அப்படியே தெரியுதுடா!

நீ உன் பிரண்டுக்கு 'அப்பாவுக்குத் தெரியாம தோசை சுடுறேன்'னு மெசேஜ் பண்ணதை நான் டிவியில பார்த்துட்டேன்!" கார்த்தி தன் போனைப் பார்த்தான். டிவியில் அவன் வாட்ஸ்அப் சேட் அப்படியே ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

"அடப்பாவி... டெக்னாலஜியை வச்சு என்னையே லாக் பண்ணிட்டீங்களேப்பா!" என்று கார்த்தி அசடு வழிய, "சீக்கிரம் போய் அந்த உப்பு இல்லாத தோசையை எடுத்துட்டு வா... பசிக்குது!" என்று சிரித்தார் மாணிக்கம்.



**வெ.நாராயணன்**
லால்குடி

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



கேள்வி: ஒருத்தன் 10 மாடி பில்டிங் மேல இருந்து குதிச்சான். ஆனா அவனுக்கு எதுவுமே ஆகல. எப்படி?

பதில்: ஏன்னா, அவன் 'பாதுகாப்பான' பில்டிங் மேல இருந்து குதிச்சான்!




## தினம் ஒரு சமையல்



### வரகு அரிசி பொங்கல்

தேவையான பொருட்கள்:

வரகு அரிசி: 1 கப்
பாசிப்பருப்பு: 1/4 கப்
மிளகு: 1 டீஸ்பூன் (ஒன்றும் பாதியுமாக நுணுக்கியது)
சீரகம்: 1 டீஸ்பூன்
இஞ்சி: ஒரு சிறிய துண்டு (பொடியாக நறுக்கியது)
பச்சை மிளகாய்: 1 அல்லது 2
முந்திரி பருப்பு: 10
கருவேப்பிலை: சிறிதளவு
பெருங்காயத்தூள்: ஒரு சிட்டிகை
நெய்: 2 முதல் 3 டேபிள் ஸ்பூன்
உப்பு: தேவையான அளவு
தண்ணீர்: 3 1/2 முதல் 4 கப்



செய்முறை:

வறுத்தல்: முதலில் பாசிப்பருப்பை ஒரு வாணலியில் போட்டு லேசான மணம் வரும் வரை வறுக்கவும் (நிறம் மாறக்கூடாது). இது பொங்கலுக்கு நல்ல வாசனை தரும்.
கழுவுதல்: வரகு அரிசியையும் வறுத்த பாசிப்பருப்பையும் நன்றாகக் கழுவி, தண்ணீரை வடிகட்டி வைக்கவும்.
வேகவைத்தல்: ஒரு குக்கரில் கழுவிய அரிசி, பருப்பு, தேவையான அளவு உப்பு மற்றும் 4 கப் தண்ணீர் சேர்த்து 4 முதல் 5 விசில் வரும் வரை வேகவிடவும். (சிறு தானியம் என்பதால் நன்றாகக் குழைந்து வெந்தால் தான் சுவை நன்றாக இருக்கும்).
தாளித்தல்: ஒரு சிறிய வாணலியில் நெய் ஊற்றி சூடானதும், முந்திரி பருப்பைச் சேர்த்து பொன்னிறமாக வறுக்கவும். அதன்பின் சீரகம், மிளகு, நறுக்கிய இஞ்சி, பச்சை மிளகாய், கருவேப்பிலை மற்றும் பெருங்காயத்தூள் சேர்த்துத் தாளிக்கவும்.
கலக்குதல்: குக்கரில் பிரஷர் குறைந்ததும் மூடியைத் திறந்து, வேகவைத்த அரிசி-பருப்புக் கலவையை நன்றாக மசிக்கவும். இப்போது தாளித்த பொருட்களை அதில் கொட்டி நன்றாகக் கிளறவும்.

## இலந்தை பயன்கள்



இலந்தை பழம் அதன் சுவைக்காக மட்டுமல்லாமல், உடல் ஆரோக்கியத்திற்கும் மிகுந்த நன்மைகளைத் தரக்கூடியது. கிராமப்புறங்களில் எளிதாகக் கிடைக்கக்கூடிய இந்த பழத்தின் முக்கியமான பயன்கள் இதோ:

1. செரிமானம் மேம்படும்
இலந்தை பழத்தில் நார்ச்சத்து (FIBER) அதிகமாக உள்ளது. இது மலச்சிக்கல் பிரச்சனையைத் தீர்க்கவும், செரிமான மண்டலத்தைச் சீராக வைக்கவும் உதவுகிறது. பசியின்மையால் அவதிப்படுபவர்களுக்கு இது சிறந்த மருந்தாகும்.
2. ஆழ்ந்த உறக்கத்திற்கு உதவும்
சீன மருத்துவத்தில் இலந்தை பழம் மற்றும் அதன் விதைகளைத் தூக்கமின்மை (INSOMNIA) சிகிச்சைக்காகப் பயன்படுத்துகின்றனர். இதில் உள்ள ரசாயனங்கள் நரம்பு மண்டலத்தை அமைதிப்படுத்தி, மன அழுத்தத்தைக் குறைத்து நல்ல உறக்கத்தைத் தரும்.
3. எலும்புகளின் உறுதி
இதில் கால்சியம், பாஸ்பரஸ் மற்றும் இரும்புச்சத்துக்கள் அதிகம் உள்ளன. இது எலும்புகளின் தேய்மானத்தைக் குறைத்து, எலும்புகளை வலுவாக்க உதவுகிறது. குறிப்பாக வயதானவர்களுக்கு ஏற்படும் எலும்பு மெலிவு நோயைத் தடுக்க இது உதவும்.

4. நோய் எதிர்ப்பு சக்தி
வைட்டமின் சி (VITAMIN C) மற்றும் ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் இதில் நிறைந்துள்ளன. இவை உடலில் உள்ள தேவையற்ற நச்சுக்களை நீக்கி, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றன.

## கர திரைப்படத்தின் ப்ரீ புக்கிங் வசூல்.. எவ்வளவு தெரியுமா



தனுஷ் - விக்னேஷ் ராஜா கூட்டணியில் பிரம்மாண்டமாக உருவாகியிருக்கும் திரைப்படம் கர.

இப்படத்தில் மமிதா பைஜு கதாநாயகியாக நடிக்க கே.எஸ். ரவிக்குமார், ஜெயராம், சுராஜ், கருணாஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். வேல்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

பெரிதும் எதிர்பார்ப்புடன் உருவாகி இன்று இப்படம் வெளியாகியுள்ளது. இந்த நிலையில், கர திரைப்படத்தின் ப்ரீ புக்கிங் பாக்ஸ் ஆபிஸ் வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

6 நாட்களில் மைக்கேல் திரைப்படம் செய்துள்ள வசூல்.. எவ்வளவு தெரியுமா

அதன்படி, இப்படம் ப்ரீ புக்கிங்கில் மட்டுமே ரூ. 3 கோடி வரை வசூல் செய்துள்ளது. முதல் நாள் உலகளவில் இப்படம் எவ்வளவு வசூல் செய்யும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.






பூஜா ஹெக்டே வெளியிட்டுள்ள இந்த போட்டோஷூட் புகைப்படங்கள் தற்போது ரசிகர்கள் மத்தியில் வைரலாகி வருகிறது. இதோ நீங்களே பாருங்க:

## 6 நாட்களில் மைக்கேல் திரைப்படம் செய்துள்ள வசூல்.. எவ்வளவு தெரியுமா



நடனம் என்றால் உடனடியாக அனைவரின் நினைவிற்கு வரும் ஒரே முகம் மைக்கேல் ஜாக்சன். இவருடைய வாழ்க்கையை மையமாக வைத்து உருவாகி வெளிவந்துள்ள திரைப்படம்தான் 'மைக்கேல்'.

இயக்குநர் ANTOINE FUQUA இப்படத்தை இயக்க, மைக்கேல் ஜாக்சனின் அண்ணன் மகன் ஜாபர் ஜாக்சன் ஹீரோவாக நடித்திருந்தார். அச்சு அசல் அப்படியே மைக்கேல் ஜாக்சன் போலவே நடித்து பட்டையை கிளப்பி இருந்தார்.

கடந்த வாரம் திரைக்கு வந்த இப்படம் வசூல் ரீதியாகவும், விமர்சன ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இப்படத்தின் வசூல் குறித்து தொடர்ந்து ஒவ்வொரு நாளும் பார்த்து வரும் நிலையில், 6 நாட்களில் எவ்வளவு வசூல் செய்துள்ளது என்பது குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், 6 நாட்களில் உலகளவில் மைக்கேல் திரைப்படம் ரூ. 2600 கோடிக்கும் மேல் பாக்ஸ் ஆபிஸில் வசூலித்துள்ளது. இனி வரும் நாட்களில் எவ்வளவு வசூல் செய்து சாதனை படைக்கப்போகிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.


ULTRA SEC
FACILITY FORCE
YOUR SAFETY, OUR COMMITMENT
OUR SERVICES
Security Services
(Trained Security Guards, Supervisors, 24x7 Coverage)
Facility Management Services
(Housekeeping, Maintenance, Cleaning)
Manpower Supply
(Skilled & Unskilled Stafffor Industries, Apartments, Offices
WHY CHOOSE US?
Experienced & Professional Team
24/7 Reliable Support
Affordable & Transparent Pricing
Customized Service Plans
ULTRA SEC FACILITY FORCE
Flat No : 13A, Door No: 1,
Moovarasampet Main Road,
Madipakkam, Chennai-600091.
+91 93632 98980
ultrasecfacility@gmail.com
www.ultrasecfacility.com


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


ePAPER
ePAPER
PUBLISHING
WEBSITE / SOFTWARE
Publish | Manage | Deliver
Complete Solution for
ePaper Publishing
Daily ePaper
Archive Management
Subscription & Free Access
Google Ads Integration
Upload PDF & Publish
Mark, Crop, Cut & Share
Share on Social Media
COMPLETE ePAPER WEBSITE / SOFTWARE
FOR JUST
₹2999/-
PER YEAR
UPLOAD, MARK, CROP, CUT & SHARE
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
EASY TO USE & MANAGE
SECURE & RELIABLE
BOOST YOUR ONLINE REACH
GROW YOUR AUDIENCE
CALL / WHATSAPP:
9040463899


ADVERTISE
WITH
US
7789941009


TOURS &
TRAVELS
AGENCY
WEBSITE / SOFTWARE
BOOK | MANAGE | GROW
All-in-One Solution to Grow
Your Travel Business Online
COMPLETE TOURS & TRAVELS AGENCY WEBSITE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
GROW YOUR BUSINESS
CALL / WHATSAPP:
9040463899


REAL ESTATE
AGENT
WEBSITE / SOFTWARE
LIST | SHOWCASE | CONNECT | GROW
Everything You Need to
Grow Your Real Estate Business Online
COMPLETE REAL ESTATE WEBSITE / SOFTWARE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
BOOST YOUR BUSINESS
CALL / WHATSAPP
9040463899


CRYPTO BASED
MLM WEBSITES
PROFESSIONAL • SECURE • POWERFUL
FOR
Rs. 25000/-
ONLY
ANY MLM
CRYPTO PLAN
Decentralised
ROI Plans
Helping Plans
Level Plans
Binary Plans
Compensation Plans
Generation Plans
and Many More...
CRYPTO MLM
SECURE & RELIABLE
DECENTRALISED PLATFORM
GROW YOUR BUSINESS
FREE SUPPORT & UPDATES
Call/Whatsapp:
7436914247


JOB PLACEMENT
AGENCY
WEBSITE / SOFTWARE
CONNECTING TALENT, CREATING OPPORTUNITIES
COMPLETE JOB PLACEMENT AGENCY WEBSITE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
GROW YOUR BUSINESS
CALL / WHATSAPP
9040463899


LIVE
NEWS PORTAL
WEBSITE
/ SOFTWARE
FAST | RELIABLE | DYNAMIC
Powerful Solution for
Digital News & Media Business
COMPLETE NEWS PORTAL WEBSITE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
GROW YOUR AUDIENCE
CALL / WHATSAPP:
9040463899


WANTED
ELECTRICIAN SUPERVISOR
/
ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US
7550093245 / 7358696451


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599

## மிசோரமில் விடுவிக்கப்பட்ட 13 கைதிகள் மீண்டும் கைது

**ஐஸ்வால், மே 3:**

மிசோரம் மாநிலத்தில் லுங்லே மாவட்டச் சிறை உள்ளது. இங்கு அடைக்கப்பட்டிருந்த 16 தண்டனைக்கைதிகள், போலி நீதிமன்ற ஆவணங்களைப் பயன்படுத்தி கடந்த 4 மாதங்களில் மோசடியாக விடுவிக்கப்பட்டது விசாரணைக்கு பிறகு வெளிச்சத்துக்கு வந்தது.

இதையடுத்து லுங்லே மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற அதிகாரிகள், கைதிகளை விடுவிக்க அனுமதிக்கும் நீதிமன்ற உத்தரவுகளைதேடியபோது, எந்த ஆவணமும் இல்லை.

கடந்த ஜனவரியில் தொடங்கிய இந்த மோசடி கடந்த வாரம் வரை கண்டறியப்படாமலேயே இருந்துள்ளது. இது தொடர்பாக ஏப்ரல் 25-ம் தேதி காவல் துறையிடம் புகார் அளிக்கப்பட்டது. இதையடுத்து போலீஸார் மேற்கொண்ட தீவிர தேடுதல் வேட்டையில் இதுவரை 13 கைதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு கைதி இறந்துவிட்ட நிலையில் இருவர் இன்னும் தலைமறைவாக உள்ளனர்.

உண்மையான நீதிமன்ற உத்தரவுகளைப் போலவே இவர்கள் போலி விடுதலை உத்தரவுகளை பயன்படுத்தியுள்ளனர். இதற்கு ஜெர்மையா லல்தங்துரா (22) என்ற கைதி மூளையாக செயல் பட்டதாக தெரியவந்துள்ளது.

இவர் முதலில் சக கைதிகளின்நம்பிக்கையைப் பெற்ற தாகவும் பிறகு சிறைக்குள் இருந்த சிலரின் உதவியைமிகத்திறமையாகப் பயன்படுத்திக்கொண்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த விவகாரத்தில் மேலும் சிலர் கைது செய்யப்படலாம் என காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

## நாடு முழுவதும் மே மாதம் அதிக மழைப்பொழிவு இருக்கும்: இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்

**புதுடெல்லி, மே 3:**



*2026 மே மாதத்தில் இந்தியா முழுவதும் வழக்கத்தை விட அதிகமான மழைப்பொழிவு இருக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

இதுகுறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மே மாதத்திற்கான ஒட்டுமொத்த மழைப்பொழிவு சராசரி அளவை விட 110 சதவீதத்திற்கும் அதிகமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, மே மாதத்திற்கான சராசரி மழைப்பொழிவு 64.1 மிமீ ஆகும். இந்த ஆண்டு பெரும்பாலான பகுதிகளில் இயல்பை விட அதிக மழை பெய்யக்கூடும் என்பதால், இது ஆரம்ப கால வெப்ப அலைகளில் இருந்து மக்களுக்குப் பெரும் நிம்மதியை அளிக்கும். இருப்பினும், மழைப் பரவல் நாடு முழுவதும் சீராக இருக்காது என்றும், வடகிழக்கு மற்றும் இந்தியாவின் சில பகுதிகளில் வழக்கத்தை விடக் குறைவான மழையே பெய்ய வாய்ப்புள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வானிலைசெயல்பாடுகளைப் பொறுத்தவரை, மே 5-ஆம் தேதி வரை மேற்கு வங்கம், சிக்கிம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் இடி, மின்னல் மற்றும் மணிக்கு 40 முதல் 60 கி.மீ வேகத்தில் வீசும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. அதேபோல், மே 3 முதல் மே 6 வரை வடமேற்கு மற்றும் மத்திய இந்தியாவின் சமவெளிப் பகுதிகளிலும், கிழக்குக் கடற்கரை மாநிலங்களிலும் இடி மற்றும் புயல் செயல்பாடுகள் இருக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூடுதல் மழைப்பொழிவு நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும் வெப்பத்தைத் தணிக்கவும் உதவும் என்றாலும், குறுகிய காலத்தில் பெய்யும் தீவிர மழை நகர்ப்புற வெள்ளத்திற்கும் விவசாயப் பாதிப்புகளுக்கும் வழிவகுக்கும் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

## உ.பி. நீதிபதியிடம் ரூ.24 லட்சம் மோசடி

**லக்னோ, மே 3:**

உ.பி. தலைநகர் லக்னோவில் 'அல் ஃபஹத் டூரிசம் கம்பெனி' என்ற ஒரு நிறுவனம் உள்ளது. இந்த நிறுவனத்தின் சார்பில் ஹஜ் யாத்திரைக்கு ஏற்பாடு செய்வதாக கூறி நீதிபதி ஒருவரிடம் ஆன்லைனில் ரூ.23.99 லட்சம் வசூலித்து மோசடி செய்யப்பட்டது.

புகாரின் அடிப்படையில் போலீஸார் விசாரணை நடத்தி அந்த நிறுவனத்தை சேர்ந்த உசாமா ரஷீதி, இஜாஸ் அகமது ஆகிய இருவரை கைது செய்தனர். நிறுவனத்தின் இயக்குநர் ஆமிர் ரஷீதி உள்ளிட்ட இருவரை தேடி வருகின்றனர்.

இந்த முறைகேட்டில் 4 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பணத்தை மீட்க முயற்சி மேற்கொள்ளப் பட்டு உள்ளதாக போலீஸார் தெரிவித்தனர்.

## 9-ம் வகுப்பு பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணி தீவிரம்: என்.சி.இ.ஆர்.டி. தகவல்

**புதுடெல்லி, மே 3:**

புதிய தேசிய கல்விக்கொள்கை அடிப்படையில் 9-ம் வகுப்புக்கு புதிய பாடப்புத்தகங்களை தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (என்.சி.இ.ஆர்.டி.) அறிமுகம் செய்துள்ளது. இந்த புதிய பாடப்புத்தகங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பல இடங்களில் இருந்து புகார் எழுந்துள்ளது. எனவே இது தொடர்பாக என்.சி.இ.ஆர்.டி. அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், 'புதிய கல்விக்கொள்கை அடிப்படையிலான 9-ம் வகுப்பு பாடப்புத்தகங்கள் போர்க்கால அடிப்படையில் அச்சிடப்பட்டு வருகின்றன. அத்துடன் நாடு முழுவதும் வினியோகிக்கப்பட்டும் வருகின்றன. மிக அதிக எண்ணிக்கையிலான பாடப்புத்தகங்கள் தேவைப்படுவதால், சில இடங்களில் அவற்றின் வினியோகத்துக்கும் தேவைக்கும் இடையே தற்காலிக இடைவெளி ஏற்பட்டுள்ளது' என கூறப்பட்டுள்ளது.

இந்த சூழலை என்.சி.இ.ஆர்.டி. உன்னிப்பாகக் கண்காணித்து, இந்த இடைவெளியைக் குறைக்கப் பணியாற்றி வருவதாகவும், பாடப்புத்தகங்களின் வினியோகம் சீரடைந்து வருவதாகவும் கூறியுள்ளது.

## 'தெலங்கானா ரக்ஷன சேனா': கவிதா கட்சிப் பெயர் மாறியது



**ஹைதராபாத், மே 3:**

*தெலங்கானா முன்னாள் முதல்வரும், பிஆர்எஸ் கட்சியின் தலைவருமான கே.சந்திரசேகர ராவின் மகள் கவிதா. நிஜாமாபாத் மக்களவை உறுப்பினர், தெலங்கானா மேலவை உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்துள்ளார்.*

*குடும்ப பிரச்சினை காரணமாக பிஆர் எஸ் கட்சியை விட்டு விலகினார். கடந்த 25-ம் தேதி தெலங்கானா ராஷ்டிர சேனா என்ற பெயரில் தனிக் கட்சி தொடங்கினார். தேர்தல் ஆணையத்தின் பதிவுக்காக 5 பெயர்களை பரிந்துரை செய்திருந்தார். இதில் தெலங்கானா ரக்ஷன சேனா என்ற பெயர் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்திடம் இருந்து நேற்று கடிதம் வந்துள்ளது.*

*இதனை கவிதா 'எக்ஸ்' தளத்தில் தெரிவித்துள்ளார். அப்பதிவில் டிஆர்எஸ் எனும் பெயர் மீண்டும் வந்ததற்கு கடவுளுக்கு நன்றி தெரிவிப்பதாக அவர் கூறியுள்ளார்.*

*கட்சியின் இப்பெயர் குறித்து இன்னும் 30 நாட்கள் வரை யாரிடமிருந்தும் எவ்வித ஆட்சேபமும் வரவில்லை எனில், இந்தப் பெயரே கட்சியின் பெயராக அதிகாரப் பூர்வகாக அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.*

## பேரவைக்கு மதுபோதையில் வந்த முதல்வர் பகவந்த் மான்: பாஜக எம்.பி. ஸ்வாதி மாலிவால் குற்றச்சாட்டு

**சண்டிகர், மே 3:**

*பஞ்சாப்சட்டப்பேரவைக்கு மது போதையில் முதல்வர் பகவந்த் மான் வந்தார். இந்த செயல் அவமானம் என்று பாஜக மாநிலங்களவை எம்.பி. ஸ்வாதி மாலிவால் குற்றம் சாட்டியுள்ளார்.*

*ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த ராகவ் சத்தா உள்ளிட்ட 7 மாநிலங்களவை எம்.பிக்கள் அண்மையில் அந்தக் கட்சியில் இருந்து விலகி பாஜகவில் சேர்ந்தனர். இதனால் பஞ்சாப் ஆம் ஆத்மி கட்சியில் பெரும் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. பஞ்சாப் மாநில சட்டப்பேரவைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் முதல்வர் பகவந்த் மான் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிலையில் பேரவைக் கூட்டத்துக்கு முதல்வர் பகவந்த் மான் மது அருந்திவிட்டு வந்ததாக காங்கிரஸ், அகாலி தளம் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.*

*இதுதொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவர் சுக்பால் சிங் கைரா தனது எக்ஸ் தளத்தில், "சட்டப்பேரவையில் முதல்வர் பகவந்த் மான் போதையில் இருந்தார். அவருக்கு மது போதை பரிசோதனை நடத்தப்பட வேண்டும்.*

*நாங்கள் (காங்கிரஸ்) அவையில் இருந்து வெளிநடப்பு செய்துவிட்டோம். மேலும், நாங்களே முன்வந்து அந்தப் பரிசோதனையை மேற்கொள்ளவும் தயாராக இருக்கிறோம்" என்று குறிப்பிட்டிருந்தார்.*

*மேலும் சிரோமணி அகாலி தளம் கட்சி தனது எக்ஸ் தளத்தில், "முதல்வரின் நடத்தையைச் சிரோமணி அகாலி தளம் வன்மையாகக் கண்டிக்கிறது; இந்நாளில் அவர் மது அருந்திய நிலையில் வந்திருக்கக் கூடாது. அவரை இன்றே ஒட்டுமொத்த பஞ்சாப் மாநில மக்களின் முன்னிலையில் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்" என குறிப்பிட்டுள்ளது.*

*பாஜக மாநிலங்களவை உறுப்பினர் ஸ்வாதி மாலிவால் தனது எக்ஸ் தளத்தில், "ஜனநாயகத்தின் ஆலயமாகத் திகழும் பஞ்சாப் சட்டப்பேரவைக்கு, பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் மீண்டும் மது போதையில் வந்துள்ளார். இது மிகப்பெரிய அவமானம். அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவர் மது அருந்தியிருந்தாரா என்பது தொடர்பாக உடனடியாக மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.*

## 20 ஆண்டுகளாக வசித்து வந்த அரசு வீட்டை காலி செய்தார் நிதிஷ்

**பாட்னா, மே 3:**

பிஹார் முதல்வராக இருந்த நிதிஷ்குமார் கடந்த மார்ச் மாதம் ராஜினாமா செய்தார். இதைத் தொடர்ந்து அவர் மாநிலங்களவை எம்.பி.யாக பதவியேற்றுக் கொண்டார். இந்நிலையில் 20 ஆண்டுகளாக தான் வசித்து வந்த முதல்வரின் அதிகாரப்பூர்வ வீட்டை நேற்று நிதிஷ் குமார் காலி செய்தார். அவரது வீட்டில் இருந்த கட்டில், மேஜை, நாற்காலிகள், ஏர் கூலர்கள் போன்ற பொருட்களை அவரது வேலையாட்கள் டிராக்டர் மூலம் அனுப்பி வைத்தனர். பல ஆண்டுகள் முதல்வராக இருந்த போதும் தனது வீட்டில் விலையுயர்ந்த பொருட்கள் எதையும் நிதிஷ்குமார் பயன்படுத்தவில்லை. அவர் தினமும் பயன் படுத்தும் பொருட்களை 3 சக்கர தள்ளுவண்டியில் அவரது உதவியாளர்கள் எடுத்துச் சென்றனர்.

பாட்னாவிலுள்ள அன்னே மார்க் பகுதியில் வசித்து வந்த நிதிஷ்குமார், தற்போது சர்க்குலர் சாலையில் 7-ம் எண்ணுள்ள வீட்டுக்கு மாறியுள்ளார். சுமார் 20 ஆண்டுகள் முதல்வராக இருந்த போதும்அவர் ஏசி போன்ற பொருட்களைப் பயன்படுத்தவில்லை. கடந்த 2014-ல் அவர் முதல்வர் பதவியை ராஜினாமா செய்து, ஜிதன் ராம் மாஞ்சியை முதல்வர் பதவியில் அமர்த்தினார்.

அப்போது சில காலம் சர்க்குலர் சாலை பங்களாவில் நிதிஷ்குமார் வசித்து வந்தார். தற்போது அதே பங்களாவுக்குச் செல்கிறார் நிதிஷ்குமார். நிதிஷ்குமாரின் இந்த எளிமையான வாழ்க்கையைப் பாராட்டி சமூக வலை தளங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றன.

## கேரளாவில் 2 வாரங்களில் பாம்புக்கடிக்கு 10 பேர் உயிரிழப்பு

**திருவனந்தபுரம், மே 3:**

கேரளாவில் கடந்த 2 வாரங்களில் பதிவான பாம்புக்கடி மரணங்களின் எண்ணிக்கை 3 குழந்தைகள் உள்பட 10 ஆக உயர்ந்துள்ளது.

கேரளம் மாநிலம் இயற்கை அழகு சூழ்ந்து காணப்படுவதால் 'கடவுளின் தேசம்' என அழைக்கப்படுகிறது. அதே சமயம் இந்தியாவில் மேற்கு வங்காளத்துக்கு அடுத்து விஷ பாம்புகள் அதிகம் இருக்கும் மாநிலங்களில் 2-வது இடத்தில் கேரளம் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 12 ஆயிரம் மக்கள் பாம்புக்கடியால் பாதிக்கப்படுகின்றனர்.

கேரளம் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக கடும் வெப்பம் நிலவி வருகிறது. கேரளாவின் பல மாவட்டங்களில் கடுமையான கோடை வெப்பம் காரணமாக நிழல், குளிர்ச்சியான சூழல் மற்றும் இரைகளை தேடி பாம்புகள் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

திருவனந்தபுரத்தில் பாம்புக்கடியால் சிகிச்சை பெற்றுவந்த 64 வயதுமுதியவர் நேற்று மருத்துமனையில் உயிரிழந்தார். பார்வை குறைபாடு கொண்டவரான அவர் இரவு உணவு சாப்பிட்ட பிறகு வீட்டை விட்டு வெளியே வந்தபோது பாம்பு கடித்ததாக போலீசார் தெரிவித்தனர்.

இதையடுத்துகேரளாவில் கடந்த 2 வாரங்களில் திருவனந்தபுரம், ஆலப்புழா, திருச்சூர், காசர்கோடு, இடுக்கி, கண்ணூர் உள்ளிட்ட மாவட்டங்களில் பதிவான பாம்புக்கடி மரணங்களின் எண்ணிக்கை 3 குழந்தைகள் உள்பட 10 ஆக உயர்ந்துள்ளது. பாம்புக்கடியால் பலரும் மாநிலம் முழுவதும் பல்வேறு மருத்துமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

## மணிப்பூரில் 23 சட்டவிரோத பதுங்கு குழிகளை அழித்த பாதுகாப்புப் படையினர்!



**புதுடெல்லி, மே 3:**

மணிப்பூரில் உக்ருல் மாவட்டத்தில் பயங்கரவாதிகளின் 23 சட்டவிரோத பதுங்கு குழிகளை அழித்ததோடு, தெங்னௌபால்மாவட்டத்தில் 18 வெடிகுண்டுகளை பாதுகாப்புப் படையினர் பறிமுதல் செய்தனர்.

லிட்டன் காவல் நிலையப் பகுதியில் உள்ள மலை கிராமங்களான மோங்கோட் செபு, ஷோங்பெல், முல்லம், சிராராகோங் மற்றும் ரிங்கு ஆகிய பகுதிகளில் இருந்த இந்தப் பதுங்கு குழிகள் வியாழக்கிழமை (ஏப்ரல் 30) கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டன. மேலும், அங்கிருந்துதுப்பாக்கிமற்றும் தோட்டாபோன்றபொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதனிடையே, புதன்கிழமை (ஏப்ரல் 29) அன்று நடைபெற்ற தேடுதல் பணியில், தெங்னௌபால் மாவட்டத்தில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த இடத்தை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர்.

மணிப்பூரில் நிலவி வரும் இன மோதல்களுக்கு மத்தியில், வன்முறையைக் கட்டுப்படுத்தவும்அமைதியை நிலைநிறுத்தவும்பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து இதுபோன்ற தேடுதல் பணிகளில்தீவிரமாகஈடுபட்டு வருகின்றனர்.

இந்த ஆண்டுபிப்ரவரியில் உக்ருல்மாவட்டத்தில்உள்ள டாங்குல் நாகா மற்றும் குகி சமூகத்தினரிடையே வன்முறை வெடித்தது. இதில்நடந்ததுப்பாக்கிச்சூடு சம்பவங்களில்சுமார் ஏழுபேர் சுட்டுக் கொல்லப்பட்டதோடு 30-க்கும் மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கேரளாவில் 6-ந்தேதி ஓட்டல் உரிமையாளர்கள் வேலைநிறுத்தம் அறிவிப்பு



**திருவனந்தபுரம், மே 3:**

வணிக சிலிண்டர்களின் விலை உயர்வு தொடர்பாக எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்ட அறிவிப்புக்கு பல்வேறு அரசியல் கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், கேரள மாநிலத்தில் வணிக சிலிண்டர்கள் விலை உயர்வை கண்டித்து வரும் 6-ந்தேதி மாநிலம் தழுவிய வேலைநிறுத்தப் போராட்டம் நடத்த உள்ளதாக ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கேரள மாநில ஓட்டல் மற்றும் ரெஸ்டாரண்ட் உரிமையாளர்கள் சங்க தலைவர் ஜெயபால் கூறுகையில், "வணிக சிலிண்டர்களின் விலை 993 ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 5 மாதங்களில் சிலிண்டர் விலை 1,498 ரூபாய் உயர்ந்துள்ளது. இதனால் உணவு உற்பத்தி மற்றும் விநியோகத் துறை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. வணிக சிலிண்டர்களின் நியாயமற்ற விலை உயர்வை கண்டித்து மாநிலம் முழுவதும் வரும் 6-ந்தேதி ஓட்டல்கள் மற்றும் ரெஸ்டாரண்டுகள் மூடப்படும். மாவட்ட தலைநகரங்கள் மற்றும் எண்ணெய் நிறுவன அலுவலகங்கள் முன்பு தர்ணா போராட்டங்கள் நடத்தப்படும்" என்று தெரிவித்தார்.

## ஸ்டெல்த் தொழில்நுட்பத்துடன் தயாரிப்பு: 'மகேந்திரகிரி' போர்க்கப்பல் இந்திய கடற்படையில் இணைப்பு

**மும்பை, மே 3:**




*மத்திய அரசின் 'புராஜெக்ட் 17ஏ' திட்டத்தின் கீழ், எதிரி நாடுகளின் ரேடார்களில் சிக்காத 'ஸ்டெல்த்' தொழில்நுட்பத்துடன் கூடிய 7 அதிநவீன போர்க் கப்பல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதில் 6-வது போர்க்கப்பலான 'மகேந்திரகிரி' கட்டி முடிக்கப்பட்டு தயார் நிலையில் இருந்தது.*

*மும்பையில் உள்ள மசகான் கப்பல் கட்டும் தளத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில், இந்த பிரமாண்ட போர்க்கப்பல் இந்திய கடற்படையிடம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டது.*

*'மகேந்திரகிரி' போர்க்கப்பல் முற்றிலும் இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்டு, முழுக்க முழுக்க உள்நாட்டு தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் அதிநவீன ஏவுகணைகள், எதிரி நாடுகளின் நீர்மூழ்கி கப்பல்களை கண்டறியும் கருவிகள் மற்றும் நவீன துப்பாக்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. இது இந்திய கடல் எல்லையை பாதுகாப்பதில் மிக முக்கிய பங்கு வகிக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.*

*சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள இந்த போர்க்கப்பல் இந்திய பாதுகாப்பு துறையில் ஒரு மைல்கல்லாக கருதப்படுகிறது.*




# அமெரிக்காவில் இருந்து குமரி வந்து உயிரை மாய்த்துக் கொண்ட கேரள சகோதரிகளின் உருக்கமான மின்னஞ்சல்



**நாகர்கோவில், மே.03:** கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் குறிகாட்டில் கிடங்கூர் பகுதியை சேர்ந்தவர் பிலிப். இவரது மகள்கள் எலிசபெத் பிலிப், ஆனி பிலிப், மீரா பிலிப். இதில் மூத்த மகள் எலிசபெத் பிலிப் திருமணம் ஆகி லண்டனில் வசித்து வருகிறார்.

ஆனி பிலிப் (35) எக்ஸ்ரே டெக்னீசியனாகவும், அவரது தங்கையான மீரா பிலிப் (32) பொறியாளராகவும் அமெரிக்காவில் வேலை பார்த்து வந்தனர். இந்நிலையில், அமெரிக்காவில் இருந்து இருவரும் கேரளாவுக்கு சொந்த ஊருக்கு வந்துள்ளனர்.

பின்னர் அவர்கள் அங்கிருந்து ராமேசுவரம், மதுரை போன்ற இடங்களை சுற்றி பார்த்துவிட்டு, கடந்த 26-ம் தேதி மாலை கன்னியாகுமரிக்கு சுற்றுலா வந்துள்ளனர். அங்குள்ள தனியார் விடுதியில் இருவரும் அறை எடுத்து தங்கினர்.

அங்கிருந்து வெளியே சென்றவர்கள், 3 நாட்களாக திரும்பி வரவில்லை. இதனால் விடுதி ஊழியர்கள் கலக்கமடைந்தனர். செல்போன் எண்ணை வைத்து அவர்களின் தாயார் மேரி என்பவரை தொடர்புகொண்டு தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து மாயமான சகோதரிகளின் தந்தையான பிலிப்பின் அண்ணன் சிஷு என்பவரும், அவர்களது உறவினர்களும் கன்னியாகுமரிக்கு வந்து பல்வேறு இடங்களிலும் தேடிப்பார்த்தனர். புகாரின்பேரில் கன்னியாகுமரி போலீஸாரும் தேடினர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் காலை கன்னியாகுமரி வாவத்துறை கடல் தூண்டில் வளைவில் இருவரும் சடலமாக கிடந்தனர். அவர்களது உடலை மெரைன் போலீஸார் மீட்டு விசாரணை நடத்தினர். போலீஸார் நடத்திய விசாரணையில், சகோதரிகள் கடலில் குதித்து தற்கொலை செய்துகொண்டது தெரியவந்தது.

அமெரிக்காவில் இருந்து புறப்படும்போது ஆனி பிலிப், மீரா பிலிப் ஆகியோர் தங்களது மூத்த சகோதரி எலிசபத் பிலிப்புக்கு மின்னஞ்சல் அனுப்பியுள்ளனர். அதில், 'மன வருத்தத்துடன் ஊருக்கு புறப்படுகிறோம். இனி எங்களை தொடர்பு கொள்ள முயற்சிக்க வேண்டாம். எங்களுக்காக ஒன்று மட்டும் செய்யுங்கள்.

நாங்கள் இருவரும் இறந்த பின்னர் கன்னியாகுமரிக்கு வந்து எங்களுக்கு இறுதி சடங்கு செய்துவிட்டு அஸ்தியை கன்னியாகுமரி கடலில் கரைத்து விடவேண்டும்.

இதை எங்களுக்காக செய்ய வேண்டும்' என மின்னஞ்சலில் தெரிவித்துள்ளது தெரியவந்தது. தற்கொலை செய்துகொண்ட சகோதரிகளின் உடல்கள் பிரேத பரிசோதனைக்கு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# கடற்கரையில் வகுப்பு தோழருடன் அமர்ந்திருந்த கல்லூரி மாணவியை மிரட்டி பணம் பறித்த காவலர் கைது

**சென்னை, மே.03:** அடையாறு பகுதியைச் சேர்ந்த 20 வயது இளம் பெண் ஒருவர் கேளம்பாக்கத்தில் உள்ள தனியார் கல்லூரியில் ஏ.ஐ (செயற்கை நுண்ணறிவு) தொழில்நுட்பம் தொடர்பாக 3-ம் ஆண்டு படித்து வருகிறார். இவர், தனது வகுப்பு தோழருடன் நேற்று முன்தினம் இரவு காரில் பெசன்ட் நகர் கடற்கரையை ஒட்டியுள்ள பகுதிக்கு சென்றார்.

அங்கு காரை நிறுத்திவிட்டு இருவரும் பின் இருக்கையில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது 30 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் காருக்குள் டார்ச் லைட் அடித்துள்ளார்.

பிறகு கார் கதவை திறந்து ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்து கொண்டு, தான் சாஸ்திரி நகர் காவல் நிலைய காவலர் எனக்கூறி அடையாள அட்டையை காண்பித்துள்ளார். இங்கே தனிமையில் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என கல்லூரி மாணவியிடமும், அவரது வகுப்பு தோழரிடமும் அநாகரீகமாக பேசி உள்ளார்.

பின்னர், நான் கேட்கும் பணத்தை தரவில்லை என்றால் காவல் நிலையம் அழைத்துச் சென்று இருவர் மீதும் வழக்குப்பதிவு செய்து விடுவேன் என மிரட்டல் விடுத்ததாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து, இருவரும் தங்கள் கையில் பணம் இல்லை. ஏடிஎம்மில் எடுத்து தருகிறோம் எனக் கூறியுள்ளனர். இதையடுத்து அந்த காவலரே காரை ஓட்டிச் சென்று சிறிது தூரத்தில் உள்ள வங்கி ஏடிஎம் வாசலில் நிறுத்தியுள்ளார். கல்லூரி மாணவர் மட்டும் இறங்கி சென்று ஏடிஎம்-ல் ரூ.8,000 எடுத்து வந்து காவலரிடம் கொடுத்துள்ளார்.

கல்லூரி மாணவர் ஏடிஎம்மில் பணம் எடுக்க சென்ற நேரத்தில் காரில் அமர்ந்திருந்த மாணவியிடம் காவலர் அத்துமீறலில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. பணத்தை வாங்கியதும் மேலும், சிறு தூரம் காரை ஓட்டிச் சென்ற காவலர் காரை நிறுத்திவிட்டு, தனது இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்.

பிறகு கல்லூரி மாணவியும் அவரது வகுப்பு தோழரும் அவர்களது வீடுகளுக்கு சென்று விட்டனர். நடந்த சம்பவம் தொடர்பாக கல்லூரி மாணவி நேற்று முன்தினம் தனது சகோதரியிடம் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து கல்லூரி மாணவியும் அவரது சகோதரியும் சாஸ்திரி நகர் காவல் நிலையம் வந்து புகார் அளித்தனர். அதன் பேரில் போலீஸார் சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்து ஜோசப் என்ற காவலரை கைது செய்தனர்.

கொண்டித்தோப்பு காவலர் குடியிருப்பில் வசிக்கும் அவர் அயல் பணியாக உயர் நீதிமன்ற வளாகத்தில் பணியாற்றுவதாக போலீஸார் தெரிவித்தனர். இவர் இதே போல் வேறு யாரிடமாவது கைவரிசை காட்டி உள்ளாரா? என அவரிடம் போலீஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

# சட்ட விரோதமாக மதுபானம் விற்றவர் கைது: 562 பாட்டில்கள், பைக் பறிமுதல்

**தூத்துக்குடி, மே.03:** தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் நிலைய இன்ஸ்பெக்டர் மீகா மற்றும் போலீசார் நேற்று, கோவில்பட்டி மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கயத்தாறு, அய்யனார் ஊத்து பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அந்த பகுதியில் சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த நபரை பிடித்து போலீசார் விசாரணை செய்தனர். அதில் அவர் கயத்தார் பகுதியைச் சேர்ந்த ராஜா (வயது 35) என்பதும், அவர் அந்த பகுதியில் சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்டதும் தெரியவந்தது.

உடனே மேற்சொன்ன போலீசார் ராஜாவை கைது செய்து, அவரிடமிருந்த 562 மது பாட்டில்கள், ரொக்க பணம் ரூ.1,600 மற்றும் இருசக்கர வாகனம் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். மேலும் இதுகுறித்து கோவில்பட்டி மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சித்ரா பவுர்ணமி, மே தின தொடர் விடுமுறை: அரசு பேருந்துகளில் 2.13 லட்சம் பேர் பயணம்



**சென்னை, மே.03:** மே தின தொடர் விடுமுறை, சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு நேற்று முன்தினம் இயக்கப்பட்ட சிறப்பு பேருந்துகளில் 2.13 லட்சம் பேர் பயணம் செய்துள்ளதாக போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது.

மே தினத்தை தொடர்ந்து சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை என 3 நாட்கள் தொடர் விடுமுறை இருந்ததால் அதிகளவில் மக்கள் வெளியூர்களுக்கு பயணம் மேற்கொள்வார்கள், குறிப்பாக ஐடி உழியர்கள் மற்றும் பல துறைகளில் பணிபுரிவோர் இந்த விடுமுறையில் சுற்றுலா செல்வார்கள் என்பதால், போக்குவரத்து துறை சார்பில் கூடுதலாக சிறப்பு பேருந்துகள் நேற்று முன்தினம் (ஏப்.30-ம் தேதி) முதல் மே 2-ம் தேதி வரை இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதேபோல நேற்று சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலை செல்லும் பக்தர்களுக்காக கடந்த 2 நாட்களாக சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் அரசு இயக்கிய சிறப்பு பேருந்துகளில் 2.13 லட்சம் பேர் பயணம் செய்துள்ளதாக போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் மோகன் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மே தின தொடர்விடுமுறை மற்றும் சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு, பொது மக்கள் பயணம் மேற்கொள்ள வசதியாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் சென்னையிலிருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

ஏப்.30-ம் தேதி முதல் மே 1-ம் தேதி அதிகாலை 3 மணி வரை, வழக்கமாக இயக்கப்படும் 2,092 பேருந்துகள் முழுமையாக இயக்கப்பட்டதுடன், கூடுதலாக 1,784 சிறப்பு பேருந்துகள் என மொத்தம் 3,876 பேருந்துகள் இயக்கப்பட்டு, 2,13,180 பயணிகள் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

மேலும் இன்றைய தினம் 3,150 பேர் முன்பதிவு செய்துள்ளனர், சென்னையில் இருந்து கூடுதலாக 450 பேருந்துகள் இயக்கப்படும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# நோயாளிகளுக்கு ஜெனரிக் மருந்துகளையே பரிந்துரைக்க வேண்டும்: சுகாதார சேவைகள் இயக்ககம் அறிவுறுத்தல்



**சென்னை, மே.03:** மத்திய அரசின் கீழ் செயல்படும் மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு ஜெனரிக் மருந்துகளை மட்டுமே பரிந்துரைக்க வேண்டும் என்று மத்திய சுகாதார சேவைகள் தலைமை இயக்ககம் அறிவுறுத்தியுள்ளது.

இந்திய மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்த அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்களுக்கான நெறிசார் வழிகாட்டுதல்கள் மற்றும் விதிகளை தேசிய மருத்துவ ஆணையம் 3 ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்டது.

அதில் முக்கியமாக, 'ஜெனரிக் மருந்துகளை (மூலப் பெயர் கொண்ட மருந்துகள்) மட்டுமே மருத்துவர்கள் பரிந்துரைக்க வேண்டும். இந்த விதியை மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என்று மருத்துவ ஆணையம் தெரிவித்திருந்தது.

இதற்கு பல்வேறு தரப்பில் இருந்தும் ஆட்சேபம் எழுந்தது. 'ஜெனரிக் மருந்துகளை பரிந்துரை செய்வதில் தவறில்லை. ஆனால், அதன் தரத்தை எவ்வாறு உறுதி செய்வது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். தரமற்ற மருந்துகளால் பக்க விளைவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று இந்திய மருத்துவ சங்கம் (ஐஎம்ஏ) தெரிவித்தது.

நாடு முழுவதும் உற்பத்தியாகும் அனைத்து மருந்துகளின் தரத்தையும் உறுதிப்படுத்துவதை ஒழுங்குமுறை செய்த பிறகே, இந்த விதிகளை அமல்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இக்கோரிக்கைகளை ஏற்ற மருத்துவ ஆணையம், அந்த விதிகளை தற்காலிகமாக தள்ளிவைப்பதாக தெரிவித்தது.

இந்நிலையில், மத்திய அரசின் மருத்துவமனைகளுக்கு மத்திய சுகாதார சேவைகள் தலைமை இயக்ககம் தற்போது அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், 'கடந்த 2023 வழிகாட்டுதல்களைப் பின்பற்றி மத்திய அரசின் மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு ஜெனரிக் மருந்துகளை மட்டுமே பரிந்துரைக்க வேண்டும்.

இதை மருத்துவமனை நிர்வாகங்கள் கண்காணிக்க வேண்டும். அதுதொடர்பான அறிக்கையை 3 மாதங்களுக்கு ஒரு முறை சமர்ப்பிக்க வேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது.

# புறம்போக்கு நிலத்தில் உள்ள கட்டுமானங்களை இடிக்கக் கோரிய வழக்கு: அரசு பதிலளிக்க நீதிமன்றம் உத்தரவு



**சென்னை, மே.03:** திருநீர் மலையில் புறம்போக்கு நிலத்தில் குட்டையை நிரப்பி கட்டப்பட்டுள்ள வணிக வளாகங்களை இடிக்கக்கோரிய வழக்கில், தமிழக அரசு பதிலளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

சென்னை திருநீர் மலையை அடுத்த திருமங்கையாழ்வார் புரத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் ஓ.உதயக்குமார் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், "திருநீர்மலையில் அரசு புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்ட நிலத்தில் பல ஆண்டுகளாக குவாரி குட்டை உள்ளது.

தற்போது தாம்பரம் மாநகராட்சி நிர்வாகம், குட்டையை மண், கட்டிட இடிபாடுகளைக் கொண்டு நிரப்பி 5 வணிக வளாகங்களையும், பொது கழிப்பறைகளையும் கட்டியுள்ளது. மழைக்காலங்களில் இப்பகுதியில் தண்ணீர் தேங்காதபடி மழைநீர் இந்த குட்டைக்குத்தான் செல்லும்.

தற்போது குட்டையை மூடி விட்டதால் அப்பகுதியில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளது. அத்துடன் குடியிருப்புகளின் அருகே கட்டப்பட்டுள்ள பொது கழிப்பறைகளால் அப்பகுதியில் சுற்றுச்சூழலும் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

எனவே குட்டையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள வணிக வளாகங்கள் மற்றும் பொது கழிப்பறைகளை இடித்து அகற்றிவிட்டு, அந்த இடத்தை பழைய நிலைக்கு மீட்டுருவாக்கம் செய்ய தாம்பரம் மாநகராட்சிக்கும், தமிழக அரசுக்கும் உத்தரவிட வேண்டும்" எனக் கோரியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், கே.சுரேந்தர் ஆகியோர் அடங்கிய அமர்வு, இதுதொடர்பாக தமிழக வருவாய் துறை, தாம்பரம் மாநகராட்சி, செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகம் உள்ளிட்டோர் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஜூன் மாதத்துக்கு தள்ளி வைத்துள்ளனர்.

# பயணிகளுக்கு நற்செய்தி.. ஏலகிரி எக்ஸ்பிரஸ் ரெயில் இன்று முதல் புத்தம்புது எல்.எச்.பி. பெட்டிகளில் இயக்கம்

**சென்னை, மே.03:** தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

பயணிகளின் வசதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் எம்.ஜி.ஆர். சென்னை சென்டிரல்-ஜோலார்பேட்டை இடையே இயக்கப்படும் ஏலகிரி எக்ஸ்பிரஸ் ரெயிலில் நாளை (3-ந் தேதி) முதல் புத்தம்புது எல்.எச்.பி. பெட்டிகள் இணைக்கப்படுகின்றன.

அதாவது, சென்னையில் இருந்து இன்று முதலும், ஜோலார்பேட்டையில்இருந்து நாளை (4-ந் தேதி) முதலும் எல்.எச்.பி. பெட்டிகளில் ஏலகிரி எக்ஸ்பிரஸ் இயங்கும்.

இந்த ரெயிலில், ஒரு குளிர்சாதன இருக்கை வசதி பெட்டி, 19 2-ம் வகுப்பு பொதுப்பெட்டிகள் இணைக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஆர்டிஐ சட்டத்தின் கீழ் கேட்ட கேள்விக்கு 2 ஆண்டுகள் தாமதமாக பதில்: கல்வியியல் பல்கலை.க்கு அபராதம்




**சென்னை, மே.03:** தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்பட்ட தகவலுக்கு 2 ஆண்டுகள் கால தாமதமாக பதிலளித்த ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துக்கு ரூ. 10 ஆயிரம் அபராதம் விதித்து மாநில தகவல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பரத்வாஜ் என்ற மாணவர் தனியார் ஆசிரியர் கல்வியியல் கல்லூரியில் கடந்த 2022 மார்ச் மாதம் நடந்த தேர்வில் பங்கேற்று எழுதியுள்ளார். ஆனால் குறிப்பிட்ட ஒரு தேர்வில் அவர் பங்கேற்கவில்லை எனக்கூறி அவருடைய சான்றிதழ் திருப்பி வழங்கப்படவில்லை.

அதையடுத்து அந்த தேர்வில் தான் பங்கேற்று எழுதியதாகவும், எனவே தனது சான்றிதழ்களை திருப்பி வழங்க வேண்டுமென்றும், இது தொடர்பாக உரிய விளக்கம் அளிக்கக் கோரியும் பரத்வாஜ் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பித்திருந்தார்.

ஆனால் தனது விண்ணப்பம் மீது 2 ஆண்டுகளாக எந்த தகவலும் அளிக்கப்படவில்லை எனக்கூறி பரத்வாஜ் மாநில தகவல் ஆணையத்தில் மனு தாக்கல் செய்தார். அதில், 'தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்படும் கேள்விகளுக்கும், விளக்கங்களுக்கும் 30 நாட்களுக்குள் பதிலளிக்க வேண்டும்.

ஆனால் தனது மனு மீது 2 ஆண்டுகளாக எந்த பதிலும் வழங்கப்படவில்லை என்பதால் ஏற்பட்ட மன உளைச்சலுக்கு உரிய இழப்பீடு வழங்கவும், தனது கல்வி சான்றிதழ்களை விடுவிக்கவும் உத்தரவிட வேண்டும்' எனக் கோரியிருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை மாநில தகவல் ஆணையர் ஆர்.பிரியாகுமார் முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக பொது தகவல் அலுவலர் நேரில் ஆஜராகி, மனுதாரர் அளித்த விண்ணப்பம் தங்களுக்கு கிடைக்கவில்லை.

மாநில தகவல் ஆணையம் அனுப்பிய சம்மன் அடிப்படையில் மனுதாரர் கோரிய தகவல்கள் அவருக்கு வழங்கப்பட்டு விட்டதாக தெரிவித்தார். அந்த விளக்கத்தை ஏற்க மறுத்த மாநில தகவல் ஆணையர், "தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் நோக்கமே தகவல்கள் எந்த ஒளிவு, மறைவுமின்றி வெளிப்படைத் தன்மையுடன் மனுதாரர்களுக்கு 30 நாட்களுக்குள் கிடைக்க வேண்டுமென்பதுதான்.

ஆனால் மனுதாரர் கோரிய மனுவுக்கு 2 ஆண்டுகள் கழித்து பதிலளிக்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரருக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக நிர்வாகம் ரூ.10 ஆயிரத்தை 20 நாட்களுக்குள் இழப்பீடாக வழங்க வேண்டும்.

அத்துடன் ஆசிரியர் பயிற்சி மாணவர் பரத்வாஜின் கல்வி சான்றிதழ்களை ஒரு வார காலத்துக்குள் திருப்பி கொடுக்க வேண்டும். இழப்பீடு மற்றும் சான்றிதழ் வழங்கியது தொடர்பாக பல்கலைக் கழக நிர்வாகம் மே 22-க்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்" என உத்தரவிட்டுள்ளார்.

# திருச்செந்தூரில் திடீரென உள்வாங்கிய கடல்



**திருச்செந்தூர், மே.03:** அறுபடை வீடுகளில் 2ம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் வருகின்றனர்.

இங்குள்ள கடலில் புனித நீராடிவிட்டு சாமி தரிசனம் செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இதனிடையே, ஒவ்வொரு மாதமும் வழக்கமாக அமாவாசை, பவுர்ணமி நாட்கள் மற்றும் அதற்கு முன்தினம், மறுதினங்களில் காலையில் கடல் உள்வாங்குவதும், மாலையில் இயல்பு நிலைக்கு திரும்புவதும் வழக்கமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், திருச்செந்தூரில் இன்று காலை திடீரென கடல் உள்வாங்கியது. சுமார் 70 அடி தூரத்திற்கு கடல் உள்வாங்கியது. கடல் உள்வாங்கியுள்ள பகுதிகளில் பாசி படர்ந்த பாறைகள் வெளியே தெரிகின்றன.

கடல் உள்வாங்கியுள்ள நிலையில் பக்தர்கள் பாதுகாப்பாக கடலில் குளிக்கும்படி கோவில் நிர்வாகம், காவல்துறை சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# கஞ்சா விற்றவர் கைது

**திருநெல்வேலி, மே.03:** திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், பாணான்குளம் பகுதியை சேர்ந்த முத்துராஜ் மகன் வானுமாமலை (வயது 27), சட்ட விரோதமாக கஞ்சா விற்பனை செய்ய வைத்திருந்த வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

மூன்றடைப்பு போலீஸ் இன்ஸ்பெக்டர் சபிதா, மேற்சொன்ன நபர் மீது தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார். அதன் பேரில், திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. பிரசண்ணகுமார் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் சுகுமார் உத்தரவின் பேரில், வானுமாமலை தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் நேற்று அடைக்கப்பட்டார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் மக்களின் பாதுகாப்பை கருதி, சட்ட ஒழுங்கை பாதுகாக்கவும், குற்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவும், அதனை கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த, இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 47 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

# 11 வயது சிறுவனுக்கு பாலியல் துன்புறுத்தல்: இளைஞருக்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறை

**திருவள்ளூர், மே.03:** சென்னை, அம்பத்தூர் பகுதியைச் சேர்ந்த 11 வயது சிறுவன், கடந்த 2024-ம் ஆண்டு தன் வீட்டருகே உள்ள கடைக்கு சென்று கொண்டிருந்தார். அப்போது, அம்பத்தூர், ஒரகடம் பகுதியைச் சேர்ந்த பிரேம்குமார் (27), சிறுவனை மிரட்டி, கடத்திச் சென்று தனது வீட்டில் பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அறிந்த சிறுவனின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில், சென்னை, அம்பத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

வழக்கு விசாரணை திருவள்ளூர் மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. அரசு தரப்பில் வழக்கறிஞர் புவனேஸ்வரி ஆஜராகி வாதாடினார். முடிவுக்கு வந்த வழக்கு விசாரணையில், பிரேம்குமார் மீதான குற்றம் நிரூபணமாகியது.

இதையடுத்து, நேற்று முன் தினம் மாலை மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்ற உமா மகேஸ்வரி தீர்ப்பு அளித்தார். அதில், பிரேம்குமாருக்கு, சிறுவனை மிரட்டி கடத்திய குற்றத்துக்கு 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.10 ஆயிரம் அபராதம், சிறுவனை பாலியல் ரீதியாக துன்புறுத்திய குற்றத்துக்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை, ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த தண்டனைகளை பிரேம்குமார் ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என உத்தரவிட்ட நீதிபதி, பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு ரூ.3 லட்சம் நிவாரணம் வழங்க அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

# வால்பாறை: தேயிலை தோட்டத்தில் உலா வந்த சிறுத்தைகள்



**வால்பாறை, மே.03:** கோவை மாவட்டம் வால்பாறையில் நகர் பகுதி மற்றும் அதனை சுற்றியுள்ள பல்வேறு எஸ்டேட் பகுதிகளில் இரவு, பகலாக சிறுத்தை நடமாட்டம் இருந்து வருகிறது.

இந்தநிலையில் வால்பாறை - பொள்ளாச்சி சாலை காமராஜர் நகர் பகுதி அருகில் உள்ள சவரங்காடு எஸ்டேட் தேயிலை தோட்ட பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் 2 சிறுத்தைகள் உலா வந்தன. இதனை அந்த வழியாக சாலையில் வாகனங்களில் சென்ற சுற்றுலா பயணிகள் பார்த்தனர்.

தொடர்ந்து, சுற்றுலா பயணிகள் ஆபத்தை உணராமல் சாலையில் வாகனங்களை தாறுமாறாக நிறுத்திவிட்டு தேயிலை தோட்டத்தில் உலா வந்த சிறுத்தைகளை கண்டு ரசித்தனர். இதையடுத்து சிறிதுநேரத்தில் அந்த வழியாக வந்த அனைத்து சுற்றுலா பயணிகள், பொதுமக்களும் சிறுத்தையை காண குவிந்தனர். அவர்கள் தங்களது செல்போனில் சிறுத்தையை புகைப்படம் எடுத்தனர். அப்போது ஒரு சிறுத்தை அங்கிருந்து ஓடிய நிலையில், மற்றொரு சிறுத்தை தேயிலை தோட்ட பகுதியில் இருந்த பாறை மீது ஏறி நடந்து சென்றது. இதனால் பரபரப்பு ஏற்பட்டது. மேலும் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தகவல் அறிந்து வனத்துறையினர் விரைந்து வந்து சுற்றுலா பயணிகளை எச்சரித்து அனுப்பி வைத்து போக்குவரத்தை சரி செய்தனர். மேலும் சிறுத்தைகளின் நடமாட்டத்தை தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

# சிதம்பரம் அருகே கிராமத்துக்குள் புகுந்த முதலை மீட்பு

**கடலூர், மே 03:** கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே உள்ள பூதகேணி கிராமம் அங்காளம்மன் கோவில் தெருவில் நேற்று காலை திடீரென 4 அடி நீளமுள்ள முதலை ஒன்று புகுந்தது. இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த அப்பகுதி மக்கள் அலறி அடித்துக்கொண்டு ஓட்டம் பிடித்தனர். சிலர் அருகில் சென்று பார்த்தபோது, அதன் தலை, வாயில் காயம் ஏற்பட்டு, ரத்தம் வழிந்தது. இதையடுத்து அவர்கள் அந்த முதலைக்கு தண்ணீர் கொடுத்தனர்.



மேலும் இதுகுறித்து சிதம்பரம் வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் வன அலுவலர் சத்தியவேல் தலைமையிலான வனப்பிரிவு காவலர்கள் விரைந்து வந்து காயமடைந்த முதலையை பிடித்து, அக்கம் பக்கத்தினரிடம் விசாரணை நடத்தினர்.

அந்த முதலை பழைய கொள்ளிடம் ஆற்றின் கிளை வாய்க்காலில் இருந்து கிராமத்திற்குள் புகுந்திருக்கலாம் என்றும், முதலைக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்பது குறித்து தெரியவில்லை என்றும் வனத்துறையினர் தெரிவித்தனர்.

பின்னர், சுமார் இரண்டரை வயதுடைய அந்த முதலையை வனத்துறையினர் மீட்டு கால்நடை மருத்துவரிடம் காண்பித்து சிகிச்சை அளித்தனர். அதன்பிறகு வக்காரமாரி ஏரியில் முதலையை பாதுகாப்பாக விட்டனர்.

# கேரளாவில் பயங்கரம்: மனைவியை கொலை செய்த கணவன் - அதிரடி கைது

**திருவனந்தபுரம், மே 03:** கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டத்தில் பொன்னானி பகுதியை சேர்ந்தவர் முகமது (23) இவரது மனைவி பாத்திமா (21). இவர்களுக்கு ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடைபெற்றது. இந்த தம்பதிக்கு தற்போது 4 மாத ஆண் குழந்தை உள்ளது.



மனைவி பாத்திமா மீது தினமும் சந்தேகப்பட்டுள்ளார். போனில் யாரிடம் பேசினாலும் ஆண் நண்பரிடம் தான் பேசுவதாக சண்டை போட்டு வந்துள்ளார். உறவினர்களிடம் கூட பேச விடாமல் கொடுமை செய்ததாக தெரிகிறது. தனது பெற்றோருக்கு தெரிந்தால் வருத்தபடுவார்கள் என்று இந்த கொடுமை பற்றி யாரிடமும் சொல்லாமல் இருந்து வந்தார்.

இந்த நிலையில் கடந்த28-ஆம் தேதி நள்ளிரவில் வழக்கம் போல மனைவியை எழுப்பி தகராறில் ஈடுபட்ட முகமது கடற்கரைக்கு காற்று வாங்க போகலாம் எனக் கூறி மனைவியை அழைத்துள்ளார். தூக்க கலக்கத்தில் கணவர் படுத்திய கொடுமையால் பொறுமையிழந்த பாத்திமா தூங்கி கொண்டிருந்த குழந்தையுடன் கடற்கரைக்கு சென்றுள்ளார்.

கடற்கரையிலும் தனது மனைவியுடன் சண்டையைத் தொடங்கிய முகமது. தூங்கவிடாமல் தகராறு செய்ததால் கோபத்தில் கணவரை எதிர்த்துப் பேசிய பாத்திமா. இதனால் இருவரும் மாறி மாறி வாக்குவாதம் செய்த நிலையில் ஆத்திரமடைந்த முகமது, பாத்திமா அணிந்திருந்த துப்பட்டாவால் கழுத்தை இறுக்கிக் கொலை செய்தார்.

அதன் பிறகு மனைவியின் சடலத்தை அங்கேயே போட்டுவிட்டு குழந்தையை தூக்கி கொண்டு அங்கிருந்து தப்பி சென்றார்.

இதற்கிடையே அதிகாலையில் கடற்கரைக்கு வந்த பொதுமக்கள் பெண்ணின் சடலத்தை கண்டு அதிர்ச்சியடைந்தனர். உடனடியாக போலீசாருக்கு தகவல் கொடுத்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் சடலத்தை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். பின்னர் தீவிர விசாரணை தொடங்கிய போலீசார் பாத்திமாவின் வீட்டிற்கு நேரில் சென்ற போது அவரது கணவர் முகமது தலைமறைவானது தெரியவந்தது.

இதனை தொடர்ந்து அக்கம் பக்கத்தினரிடம் விசாரித்தபோது தம்பதியிடம் அடிக்கடி சண்டை வரும் என்றும் இரவில் மனைவியைத் தூங்கவிடாமல் முகமது தகராறு செய்வதாகவும் தெரிவித்தனர். மேலும் முகமதுதான் கொலை செய்திருக்க வாய்ப்புள்ளது என்றும் கூறினர்.

## ஆத்தூர்: காதல் திருமணம் செய்த பட்டதாரி பெண் தற்கொலை

**ஆத்தூர், மே.03:** ஆத்தூர் அருகே தாண்டவராயபுரம் காமராஜர் நகரை சேர்ந்த சுப்பிரமணி மகள் சந்திரலேகா (வயது 29). இவர், எம்.எஸ்.சி., பி.எட். படித்து விட்டு கடந்த 2020-ம் ஆண்டு ஆத்தூர் அருகே உள்ள கல்பகனூர் இளங்கோநகரை சேர்ந்த ராஜதுரை (31) என்பவரை காதல் திருமணம் செய்து கொண்டார்.

இதற்கிடையே சந்திரலேகா வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டதாக தெரிகிறது. இதுகுறித்து ஆத்தூர் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். சந்திரலேகாவுக்கு திருமணம் ஆகி 6 ஆண்டுகள் ஆவதால் உதவி கலெக்டர் தமிழ்மணி விசாரணை நடத்தி வருகிறார். சந்திரலேகா உடல் பிரேத பரிசோதனை செய்து குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே சந்திரலேகாவின் பெற்றோர் தரப்பில் ஆத்தூர் போலீசில் பரபரப்பு புகார் அளிக்கப்பட்டுள்ளது.

அதாவது, சந்திரலேகாவும், ராஜதுரையும் வெவ்வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றும், காதலித்து திருமணம் செய்த போதிலும் திருமணத்தின் போது 8 பவுன் நகை, ரூ.2 லட்சம் சீர்வரிசையாக கொடுத்தோம். அவர்கள் பல்வேறு ஊர்களில் வீடு வாடகை எடுத்து வசித்து வந்தனர்.

திருமணம் ஆன சில நாட்களில் ராஜதுரைக்கு ஏற்கனவே திருமணம் ஆகி மனைவி, குழந்தைகள் இருப்பதை அறிந்து அதிர்ச்சி அடைந்தோம். சந்திரலேகாவுக்கு 3 முறை கருக்கலைப்பு செய்துள்ளனர்.

சாதி ரீதியாகவும் அவளை கொடுமைப்படுத்தி உள்ளனர். வரதட்சணை கேட்டும் சித்ரவதை செய்துள்ளனர்.

எனவே எங்களது மகள் சாவுக்கு ராஜதுரை காரணம் என்றும், இதுதொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த புகார் மனுவில் கூறப்பட்டுள்ளது.

# கொளுத்தும் கோடை வெயிலால் 8 அணைகளில் நீர்மட்டம் சரிவு

**தர்மபுரி, மே.03:** தர்மபுரி மாவட்டத்தில் கொளுத்தும் கோடை வெயில் மற்றும் மழை பொய்த்து போனதால், 8 அணைகளில் நீர்மட்டம் சரிந்து, குட்டையாகமாறியுள்ளது. இதன் காரணமாக, பயிர் சாகுபடி பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் பிரதான தொழிலாக விவசாயம் உள்ளது.



ஆண்டுதோறும் பருவமழை பெய்தால் மட்டுமே விவசாயப் பணிகள் செழிப்பாக நடக்கும். பருவமழை பொய்த்து போனால் விவசாய பணிகள் முடங்கி, வெளிமாநிலத்திற்கு கூலிவேலைக்கு செல்லும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்து விடுகிறது.

மாவட்டத்தில் கடந்த ஆண்டு, போதுமான அளவு பருவமழை பெய்யவில்லை. நடப்பாண்டிலும் ஜனவரி முதல் ஏப்ரல் வரை மழை பெய்யாததால், விவசாயத்திற்கு போதிய தண்ணீர் இல்லை. தற்போது அணைகளில் தண்ணீர் வேகமாக குறைந்து வருகிறது.

மாவட்டத்தில் உள்ள ஏரிகளும் தண்ணீர் இல்லாமல் வறண்டு குட்டையாக மாறியுள்ளன. இதனால் நிலத்தடி நீர் அதல பாதாளத்திற்கு சென்று விட்டது. விவசாயத்திற்கு தேவையான நீர் இல்லாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில் வாணியாறு, சின்னாறு, தொப்பையாறு, நாகாவதி, தும்பல அள்ளி, கேசர்குழி, ஈச்சம்பாடி உள்ளிட்ட 8 அணைகள் உள்ளன. இதுதவிர, 74 பொதுப்பணித்துறை ஏரிகளும், 624 ஏரி, குளங்களும் உள்ளன. நூற்றுக்கணக்கான தடுப்பணைகளும் உள்ளன. இவை அனைத்துமே தற்போது நீரின்றி வறண்டுள்ளன.

தர்மபுரி மாவட்டத்தில் பருவமழை போதிய அளவில் பெய்யாததால், சாகுபடி பரப்பு குறைந்துள்ளது. வறட்சியால் நிலக்கடலை, சாமை, ராகி, தக்காளி, கத்திரி, பீர்க்கங்காய் மற்றும் தீவனப்பயிர்கள், மாமரங்களில் மகசூல் கிடைக்காமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தர்மபுரி, ஒகேனக்கல், பென்னாகரம், பாலக்கோடு, அரூர், கோட்டப்பட்டி, தீர்த்தமலை, மொரப்பூர் வனப்பகுதிகளில், கடும் வெப்பத்துடன் கூடிய வெயில் கொளுத்தி வருகிறது.

வனப்பகுதியில் உள்ள பாறைகளில் இருந்து அனல் காற்று வீசுகிறது. ஒகேனக்கல் மலைப்பகுதியில் உள்ள மரங்கள், செடி, கொடிகள் காய்ந்து விட்டன. ஒகேனக்கல், பென்னாகரம், பாலக்கோடு வனப்பகுதி வறட்சி பிடியில் சிக்கியுள்ளது.

வனப்பகுதியில் நிலவும் வறட்சியின் காரணமாக, யானைகள், மான்கள், காட்டுப்பன்றிகள் உள்ளிட்ட வனவிலங்குகள் உணவு, தண்ணீர் தேடி வனத்தை விட்டு வெளியேறி நீர்நிலைகளை நோக்கி செல்கின்றன.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், 'தர்மபுரி மாவட்டத்தில், கடந்த ஆண்டு சராசரியை விட குறைவாக மழை பெய்தது. பருவமழை பொய்த்ததால் பயிர் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள 8 அணைகளிலும் தண்ணீர் குறைந்து, குட்டையாக காட்சியளிக்கிறது. அதே போல், ஏரிகளிலும் தண்ணீர் இல்லை.

கிராமங்களில் ஆழ்துளை கிணறுகளில் தண்ணீர் இல்லாததால், தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், கால்நடைகளை பாதுகாக்க போராட வேண்டிய நிலை உள்ளது. தற்போது கோடை வெயில் வாட்டி வதைத்து வருகிறது. தினசரி 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவாகிறது. எனவே, தர்மபுரியை வறட்சி மாவட்டமாக அறிவித்து, வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்,' என்றனர்.

இதுகுறித்து வேளாண் துறை அதிகாரிகள் கூறுகையில், 'தர்மபுரி மாவட்டத்தில் ஆண்டு சராசரி மழையளவு 942 மில்லி மீட்டர். இந்த ஆண்டு ஜனவரி, பிப்ரவரியில் 2.92 மி.மீ மழை பெய்துள்ளது. மாவட்டத்தில் 2025-26ம் ஆண்டிற்கு 2,03,030 ஹெக்டேர் பரப்பளவில் நெல், சிறுதானியங்கள், பயிறுவகைகள் உள்ளிட்ட உணவு தானிய பயிர்கள் மற்றும் எண்ணெய் வித்துக்கள், பருத்தி, கரும்பு சாகுபடி பரப்பாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதில் கடந்த பிப்ரவரி 26ம் தேதி வரை, 1,59,123 ஹெக்டேர் பரப்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டு இதுவரை போதிய மழை பெய்யவில்லை. இதனால் 8 அணைகளிலும் இருப்பு சரிந்து விட்டது. இருந்த தண்ணீரும் பாசனத்திற்காக திறந்து விடப்பட்டுள்ளது. கோடைகாலத்தில் குடிநீர் பிரச்னை ஏற்படாமல் இருக்க, வாரம் ஒருமுறை ஆலோசனை கூட்டம் நடத்தி, குடிநீர் கிடைக்காத இடத்திற்கு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,' என்றனர்.




# ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுங்கள்: தேர்தல் முடிவுகள் குறித்து பிரேமலதா கருத்து

**சென்னை, மே.03:** ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப்பொறுங்கள் என தேர்தல் முடிவுகள் குறித்து பிரேமலதா கருத்து தெரிவித்துள்ளார்.



சென்னை கோயம்பேட்டில் உள்ள தேமுதிக தலைமை அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: கருத்துக்கணிப்பை நான் எப்படி பார்க்கிறேன் என்றால் ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுங்கள்; எல்லாம் முடிந்து இருக்கிறது. இன்னும் இரண்டு நாட்கள் தான் இருக்கிறது.

மே 4-ம் தேதி காலை 8 மணிக்கு ஆரம்பித்தால் மாலை 5 மணிக்குள் ரிசல்ட் தெரியப் போகிறது. அதற்கு அதீத எதிர்பார்ப்பும், கற்பனையும் தேவையில்லை. நிச்சயம் எல்லோருக்கும் நல்லதே நடக்கும்.

மதச்சார்பற்ற வெற்றிக்கூட்டணியில் போட்டி போடுகிறோம். உறுதியாக எங்களுடைய கூட்டணி அமோக வெற்றி பெறும்.

இன்னும் 2 நாட்கள் தான் இருக்கிறது. எல்லோரும் களத்தில் மிக தீவிரமாக பணியாற்றி இருக்கிறார்கள். மே 4-ல் நிச்சயமாக வெற்றி வரும். நிச்சயமாக நான் உங்களை அழைத்துப் பேசுவேன். இவ்வாறு அவர் கூறினார்.

# தேர்தலுக்குப் பிந்தைய கருத்து கணிப்பு சரியானது அல்ல: தமிழிசை சவுந்தரராஜன் கருத்து

**பொன்னேரி, மே.03:** திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் அருகே மேலூரில் உள்ள திருவுடையம்மன் கோயிலில், சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு நேற்று தெலங்கானாவின் முன்னாள் ஆளுநரும், தமிழக பாஜகவின் முன்னாள் தலைவருமான தமிழிசை சவுந்தரராஜன் சுவாமி தரிசனம் செய்தார்.




அப்போது, அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் அனைத்தும் சரியானவை அல்ல. 4-ம் தேதி தேர்தல் முடிவுகள் வரும் வரை காத்திருக்க வேண்டும்.

உலக அளவில் போர் நடந்து கொண்டிருக்கும் வேளையில், பல நாடுகளில் பெட்ரோல், டீசல் விலை பன்மடங்கு உயர்ந்துள்ளது. ஆனால், இந்தியாவில் பெட்ரோல், டீசல், வீட்டு உபயோக சமையல் காஸ் சிலிண்டர் விலை உயரவில்லை.

பெட்ரோல், டீசல் விலை உயராமல் இருப்பதற்கு காரணம், பிரதமர் மோடியின் நிர்வாகத் திறமைதான். வர்த்தக ரீதியிலான சமையல் காஸ் சிலிண்டர் விலை உயர்வு என்பது தற்காலிகமான மாற்றம் மட்டுமே என்றார்.

# திமுக - அதிமுக எதிர்ப்பு வாக்குகளை விஜய் பிரித்திருக்கிறார் - திருமாவளவன்

**சென்னை, மே.03:** பெரும் எதிர்பார்ப்புக்கு இடையே தமிழக சட்டமன்றதேர்தல் கடந்த மாதம் (ஏப்ரல்) 23-ந் தேதி நடந்து முடிந்துள்ளது. இந்த தேர்தலில் 4 முனைப்போட்டி நிலவியது. பிரதான கட்சிகளான தி.மு.க. அ.தி.மு.க. தங்களது தலைமையில் கூட்டணி அமைத்தும், த.வெ.க.. நாம் தமிழர் கட்சிகள் தனித்தும் களம் கண்டன.



இந்த தேர்தலில் வரலாறு காணாத வகையில் 85.15 சதவீத வாக்குகள் பதிவாகியது. வருகிற 4-ந்தேதி ஓட்டு எண்ணிக்கை நடத்தப்பட்டு முடிவு அறிவிக்கப்பட உள்ளது.

இதையொட்டி ஓட்டுப்பதிவுக்கு பிந்தைய கருத்துக்கணிப்பு நேற்று முன்தினம் வெளியானது. இதில் பெரும்பாலானவை தி.மு.க. மீண்டும் ஆட்சியில் அமரும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது. ஒரு சில கருத்துக்கணிப்புகள் அ.தி.மு.க. ஆட்சியை கைப்பற்றும் என்றும், ஒரே ஒரு கருத்துக்கணிப்பு த.வெ.க. ஆட்சி அமைக்கும் என்றும் தெரிவித்து இருந்தது. இந்த கருத்துக்கணிப்பு முடிவு தமிழகத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் அடுத்து ஆட்சி அமைப்பது யார் என்ற கேள்வி மக்கள் மனதில் எழுந்துள்ளது. இதற்கான விடை நாளை மறுநாள் தெரிந்துவிடும், இந்தநிலையில், விசிக தலைவர் திருமாவளவன் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில்,

விசிக போட்டியிடாத தொகுதிகளில் ஒரு சில இடங்களில் கூட்டணிக்கு கட்சியினர் ஒத்துழைக்கவில்லை; தேர்தலில் ஒரு சில தொகுதிகளில் விசிகவினர் சிறப்பாக பணியாற்றவில்லை கூட்டணி கட்சியினருக்கு ஒத்துழைப்பு தரவில்லை என கட்சியினர் மீது புகார் வந்துள்ளது. கூட்டணி கட்சியினருக்கு ஒத்துழைக்காத விசிகவினர் குறித்து தகவல் திரட்டப்படுகிறது.

எப்படி கணக்குப் போட்டு பார்த்தாலும் திமுக கூட்டணிதான் பெரும் வெற்றி பெறும். திமுக, அதிமுக எதிர்ப்பு வாக்குகளை விஜய் பிரித்திருக்கிறார். ஆனால் ஆட்சியை கைப்பற்றும் தனித்த சக்தியாக வலிமை பெற இயலாது. திமுகவை அகற்றிவிட்டு பாஜக அங்கம் வகிக்கும் அதிமுக ஆட்சிக்கு வந்தால் விஜய்க்கு கவலையில்லை. பாஜகவை கொள்கை எதிரி என்பதை தவிர விஜய் வேறு எதுவும் சொல்வதில்லை என்றார்.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM